இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை

2021

உள்ளடக்கம்

இணைப்புத் தகவல்கள் 01

தொலைநோக்கும் பணிக்கூற்றும்..... 02

கூட்டுத்தாபனத் தகவல்கள் 03-07

தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அறிக்கை 08-41

நிதியறிக்கை 42-45

- நிதி நிலைமைக் கூற்று.....42
- வருமானக் கூற்று 43
- பங்குரிமை மாற்றற் கூற்று 44
- காசுப் பாய்ச்சற் கூற்று 45

- கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும்.....46-63
- கணக்காய்வாளர் அறிக்கை
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் 64-83



தலைமைக் காரியாலயம்
இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி : 0115757539
தொலைநகல் : 011243863
மின்னஞ்சல் : slspc@sltnet.lk
இணையம் :- WWW.SLSPC.LK

பிராந்திய அலுவலகம்
பிராந்திய அலுவலகம், கல்ஹிபில்ல, பன்விலை
தொலைபேசி : 0815634903
தொலைநகல் : 0815634902
மின்னஞ்சல் : regionalofficegp@gmail.com

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை

தொலைநோக்கு

பெருந்தோட்டத் துறையில்
அரசாங்கத்திற்குச் சொந்தமான
மிகவும் பலமான வர்த்தக
முயற்சியாக விருத்திசெய்தல்.

பணிக்கூற்று

தொழிலாளர் பங்கேற்பினூடாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை சிறப்பாக நிர்வகித்து நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் அயற் கிராமங்களுக்கு அதிகபட்ச பங்களிப்புக்களை வழங்குதல்.

பணிப்பாளர்கள் சபை

சட்டத்தரணி திரு. ஸ்ரீமால் விஜேசேகர

தலைவர்

நியமனத் திகதி 2020.01.03

பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

திருமதி. ஆர்.ஏ.ஆர்.எஸ் மாயாதுன்ன
பணிப்பாளர் சபை அங்கத்தவர் /அமைச்சின் மேற்பார்வையாளர்
நியமனத் திகதி 2020.10.12

திரு. ஜே.எல்.ஏ சம்பத் நலிந்த
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திரு. ஆர். சுசன்த சேனாரத்ன
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திரு. குஷான் வேகொடபொல
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திருமதி. டீ.ஏ மனோரத்ன
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திரு. எஸ்.எம்.சீ.எஸ் சிறிவர்தன
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திரு. ஏ.எம் சுமேத ரேணுக பண்டார
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.01.28

திரு. டப்.டப்.எம்.பீ.பீ கும்புராதெனிய
பணிப்பாளர் சபை அங்கத்தவர்
நியமனத் திகதி 2020.10.12


முகாமைத்துவம் – தலைமை அலுவலகம் – 2021

பெயர்	பதவி
சட்டத்தரணி திரு. ஸ்ரீமால் விஜேசேகர	தலைவர்
திரு. எச்.என்.பீ ஜினசேன	பொது முகாமையாளர்
திரு. ஜே.எச்.அய் ஜயசுந்தர	பதில் பிரதிப் பொது முகாமையாளர் – நிர்வாகம்
திரு. எஸ்.அய்.எம் ஹுஸைன்	பிரதிப் பொது முகாமையாளர் – நிதி
திருமதி. கே.ஏ.எச்.டீ பெரேரா	முகாமையாளர் – பெறுகை
திரு. கே முனசிங்ஹ	முகாமையாளர் – சட்டம்
திருமதி பீ.வீ.எல்.சீ பெனரகம	முகாமையாளர் - காணி
திரு. டப்.டீ.டப். கீர்த்தி	முகாமையாளர் – சந்தைப்படுத்தல்
திரு. ஈ.ஆர்.அய்.பீ.எஸ்.எஸ் பண்டார	உள்ளகக் கணக்காய்வாளர்
திரு. ஆர்.ஜீ.எஸ்.எச். குணதிலக	கணக்காளர்
திரு. ஆர்.வை.ஜீ.எஸ் யாபா	உதவி முகாமையாளர் - போக்குவரத்து
செல்வி. ஜீ.டீ.எஸ்.சீ சுதசிங்ஹ	உதவி முகாமையாளர் (நிர்வாகம் /மனித வளம்)
திரு. பீ. வீ ப்ரதீப்	உதவி முகாமையாளர் – காணிகள்
திருமதி. எச்.எம்.எஸ்.என் ஹேரத்	உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)
திரு. பீ.சீ.ஜே பனாகொட	உதவிக் கணக்காளர்
திரு. குருப்பு	கணக்காய்வு உத்தியோகத்தர்
திரு. ஜே.பீ.சீ பொன்சேகா	நிர்வாக உத்தியோகத்தர்


முகாமைத்துவம் – பெருந்தோட்டங்கள் - 2021

பெயர்	பதவி
திரு. பீ.அய்.எல் பெரேரா	தோட்ட அதிகாரி – கெலேபொக்கை அரச தோட்டம்
திரு. ஏ.சீ அபேவர்ண	தோட்ட அதிகாரி – ரங்களை அரச தோட்டம்
திரு. கே.டீ.எம்.பீ வீரசிங்ஹ	தோட்ட அதிகாரி – ஹெயார்பார்க் அரச தோட்டம்
திரு. எஸ். வய் லியனகே	தோட்ட அதிகாரி - கொடகங்கை அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.ஆர்.எம் ரனவக	தோட்ட அதிகாரி – ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம்
திரு. டீ.எம்.பீ.அய். தென்னகோன்	தோட்ட அதிகாரி – கல்பிஹில்லை அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.எம் தயாரத்ன	தோட்ட அதிகாரி – கோமரை அரச தோட்டம்
திரு. டப்.டீ.கே சமரதுங்க	தோட்ட அதிகாரி – மிட்லன்ட்ஸ் அரச தோட்டம்
திரு. டீ.ஆர்.எச் ஹேவகே	தோட்ட அதிகாரி – பாகலை அரச தோட்டம்
திரு. வய்.ஏ.டீ.பீ வடுகொடபிடிய	தோட்ட அதிகாரி – அலகொல்லை அரச தோட்டம்
திரு. ஜீ.டப்.ஜீ விஜேரத்ன	தோட்ட அதிகாரி – ஓபல்கலை அரச தோட்டம்
திரு. அய்.டப்.ஆர் ஜயவர்தன	தோட்ட அதிகாரி - வலஹந்துவை அரச தோட்டம்
திரு. டீ.டப்.டீ.சீ தன்தசிங்ஹ	தோட்ட அதிகாரி – வைதலாவை அரச தோட்டம்
திரு. ஜீ.கே.ஆர்.பீ கிரியல்ல	தோட்ட அதிகாரி, விஹாரகலை அரச தோட்டம்.
திரு. எம்.எம்.சீ.பீ அஹெலமல்பே	தோட்ட அதிகாரி – வுட்சய்ட் அரச தோட்டம்
திரு. சீ.ஜே தஸநாயக	வெளிநாட்டு விடுமுறை
திரு. சீ.எச்.எச்.கே.ஜீ லக்ருவிர	கடமைத்தழுவல்தோட்டஅதிகாரி நிகோலோய
திரு. எஸ்.டப்.எம்.சீ.எஸ் அலெதெனிய	குடாஓய அரச தோட்டம்

உரு 1 நிறுவனக் கட்டமைப்பு



இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் பரவல்.



1	Alakolla
2	Cottaganga
3	Galphella
4	Goomara
5	Hagalla
6	Harepark
7	Hunasgeria
8	Kallebokka
9	Kudaoya
10	Midlands
11	Nicholoya
12	Opalgala
13	Rangalla
14	Waithalawa
15	Walahanduwa
16	Wiharagala
17	Woodside

உரு 02 - இலங்கையில் பெருந்தோட்டங்களின் பரவல்

தலைவரின் மீளாய்வு - 2021



இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் ஒரு அரச வர்த்தக முயற்சியாக விருத்திசெய்தல் எனும் குறிக்கோளுடன், 2020 இல் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மேலும் வெற்றிகரமாக்குவதை இலக்காகக்கொண்டு கூட்டுத்தாபனத்தின் ஏனைய இலக்குகளை திட்டமிட்ட முறையில் வெற்றிகரமாக எய்துவதற்காக பணிப்பாளர் சபை மற்றும் முகாமையின் வழிகாட்டலுடன் நிறுவனத்தின் நடவடிக்கைகள் 2021 இல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நட்டம் 231.19 ஆக இருந்ததுடன், முன்னைய வருடத்தின் நட்டம் 149.63 ஆக இருந்தது. இந்த வருடத்தில் கூட்டுத்தாபனத் தொழிற்பாடுகளின் பெறுபேறுகள் மாத்திரமன்றி கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலமாக நிலவிய பல்வேறு பிரச்சினைகளும் இந்த நட்டத்திற்கான காரணங்களாக அமைந்திருந்தன. குறிப்பாக 2021, மார்ச் மாதம் முதல் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர் சம்பளம் அதிகரிக்கப்பட்டமை இவ்வாறு நட்டம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்ததுடன், இதனால் மொத்தச் செலவு கிட்டத்தட்ட 34 சதவீதமாக அதிகரித்தது.

அனைத்து பகுதிகளும் அதிக நட்டமடைந்து திறைசேரியினால் வழங்கப்படுகின்ற நிதியில் தங்கியிருந்த இந்த அரச வர்த்தக முயற்சியினை அந்நிலைமையிலிருந்து மீட்கக்கூடிய வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நிறுவனமாக இனங்கண்டு 2020 இல் செயற்பட்டதுடன், நட்டத்தினைக் குறைத்து இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்காக நீண்டகால, இடைக்கால மற்றும் குறுகியகால செயல்திட்டங்களைத் தயார்செய்துகொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. இதற்கு அடிப்படையில் நிறுவனத்தின் வளங்கள் தொடர்பாக தெளிவானதொரு புரிதலும் விளக்கமும் இருக்க வேண்டுமென்றிருந்தாலும் நிறுவனத்திற்குச் சொந்தமான இடங்கள் பற்றி சரியான தகவல்கள் இல்லாதிருந்தமை உறுதியனதொரு வேலைத்திட்டத்தினைத் தயார்செய்யும் போது எதிர்கொண்ட பிரச்சினையாகும். இந்த நிறுவனத்தின் முகாமையைப் பொறுப்பேற்கும் போது ஒரு நிறுவனத்திற்கு கட்டாயமாக இருக்க வேண்டிய வணிகத் திட்டமொன்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட செயல் திட்டமொன்றும் இருக்கவில்லை.

எனவே, உறுதியானதொரு வணிகத் திட்டத்தினைத் தயார்செய்வதை அடிப்படைச் செயற்பாடாகக் கருதிச் செயற்பட்டு அது வரையில் நிறுவனத்தை நடாத்திய பணிப்பாளர் சபை தீர்மானங்கள் தொடர்பில் முகாமையாளர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறுகியகால வேலைத்திட்டமொன்றைத் தயார்செய்து நிறுவனத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1994 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் மத்திய மலை நாட்டு வலயத்திற்குரிய கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள

தோட்டங்களே (அல்கட்டுவ தோட்டக் கம்பனி நிர்மாணிக்கப்பட்ட பிறகு) நிர்வகிக்கப்பட்டன. அந்த வகையில் மொத்தமாக 16 தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. அத்தகைய 16 தோட்டங்களுள் ஹெயாபார்க், வுட்சைட் மற்றும் வைதலாவை ஆகிய தோட்டங்களை காலத்திற்குக் காலம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் தீர்மானங்களின் படி தனியார்த் துறையினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டன. என்றாலும், அவை முறையாக நிர்வகிக்கப்படாமையினால் அவற்றை மீண்டும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுக்கொண்டது. இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டிருந்த தோட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டு முகாமை செய்யப்படாமையினால் அவற்றை சீரமைப்பதற்கு பாரிய பொறுப்புக்கள் எஞ்சியிருப்பதுடன் அவற்றின் விளைச்சலும் குறைந்துள்ளது.

காலி மாவட்டத்தின் வலஹந்துவைத் தோட்டம் மற்றும் பதுளை மாவட்டத்தின் விஹாரகலை தோட்டம் என்பவற்றை தனியார்மயப்படுத்திய பிறகு தனியார்த் துறையினர் அந்த இரு தோட்டங்களின் மிகவும் சிறிய பகுதிகளை கைவிட்டிருந்ததன் காரணமாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அவற்றை மீண்டும் பொறுப்பேற்று நிர்வகித்தாலும் அவற்றிலிருந்து கிடைத்த விளைச்சல் மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. அத்துடன், உரிய முறையில் பயிரிடப்படாமையினாலும் நிர்வாகச் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தமையினாலும், மேலும் அதிக நட்டத்துடன் அந்தத் தோட்டங்களில் கடமைபுரியும் ஆளணியை நிர்வகிக்க வேண்டியிருந்தமையினாலும் இதுவரையில் தோட்டங்களின் அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் போதிய கவனம் செலுத்தாமையும் அதிக நட்டத்திற்குக் காரணங்களாக இருந்ததென குறிப்பிட முடியும்.

அந்த வகையில், 2021 இல் நிறுவனத்தில் காணப்பட்ட அறிக்கைகளுக்கு அமைவாக 16 தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டதுடன் அவற்றின் மொத்த நிலப்பரப்பு 11,282.48 ஹெக்டெயராகும். என்றாலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள அனைத்துத் தோட்டங்களும் உலக மரபுரிமை என பிரகடனப்படுத்தியுள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரைச் சூழ அமைந்துள்ளதுடன், அந்தத் தோட்டங்களுக்குச் சொந்தமான கணிசமான நிலப்பரப்பு பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த முடியாதவாறான கரடுமுரடான சரிவுகளுடன் இருப்பதாகவும் அது அரித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் கருதி வனப் பாதுகாப்புத் திணைக்களம் அந்த நிலப்பரப்பை பைனஸ் மரப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தியிருப்பதாக குறித்த அறிக்கைகளிலிருந்து தெளிவாகியுள்ளது. அத்துடன், 2007 ஆம் ஆண்டு நக்கிள்ஸ் உலக மரபுரிமைத் தளமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வருமானம் உழைத்துக்கொண்டிருந்த தோட்டங்களின் பெரும் நிலப்பகுதி உலக மரபுரிமைத் தளத்திற்கும் இடைத்தாங்கு வலயத்திற்கும் (Buffer Zone) உட்பட்டதால், அது வரையில் தேயிலைப் பயிர்ச்செய்கையினாலும் ஏலக்காய் போன்ற துணைப் பயிர்களாலும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த வருமானம் இல்லாமல் போனது. அதேபோன்று, வன ஒதுக்கத்திற்குரிய நிலப்பரப்பாக பிரகடனப்படுத்திய பிறகு எந்தளவு நிலப்பரப்பு நீக்கப்பட்டதென இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலோ அல்லது வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினாலோ உரிய முறையில் அளந்து இனங்காணப்படவில்லை. இவ்வாறு வருமானம் உழைத்துக் கொண்டிருந்த நிலப்பரப்பின் பாதியை பாதுகாக்கப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதால் கூட்டுத்தாபனம் அடைந்த நட்டத்தினை கணக்கிட முடியாதிருப்பதுடன் அதற்குரிய இழப்பீடுகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

எனவே, வனஒதுக்குப் பிரதேசமாக கையகப்படுத்தியிருக்கும் நிலப்பரப்பினை வேறுபடுத்தி இனங்காண்பது மிகவும் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளது. அந்த வகையில், இந்நிலப்பரப்பினை பூரணமாக அளவிடுவதற்குத் தேவைப்படும் அடிப்படை நிதி ஒதுக்கீடுகள் இல்லாதிருப்பதனால், பெருந்தோட்ட அமைச்சினூடாக பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின்

கீழ் நிர்வகிக்கப்படுகின்ற நிலங்களை அளவிடுவதற்கு பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வைப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்துகின்ற வேலைத்திட்டத்தில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் காணிகளையும் உள்ளடக்குமாறு கௌரவ பெருந்தோட்ட அமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பெருந்தோட்ட அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புள்ளிவிபரங்களின் படி, இலங்கை அரச பெருந்தோட்டத்திற்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பில் 37.50 சதவீதமான நிலப்பரப்பில் (நக்கிள்ஸ் வனஒதுக்கத்திற்கு உரித்தான நிலப் பகுதியுடன்) தேயிலைப் பயிர்ச்செய்கை இடம்பெறுவதுடன், அந்த நிலப்பரப்பின் அளவு 4,074 ஹெக்டயராகும். அந்த மொத்த நிலப்பில் வெறும் 2,540 ஹெக்டயர் நிலப்பரப்பிலிருந்து மாத்திரமே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தேயிலை மூலம் வருமானம் உழைக்கின்றது என்பது கவலைக்குரிய விடயமாகும். அந்த நிலப்பரப்பிலும் மிகவும் சிறந்த விளைச்சலைப் பெறக்கூடிய தேயிலை இல்லை என்பதுடன், அங்கு இருக்கும் தேயிலை புதர்களும் ஒரு ஹெக்டயரில் இருக்கக்கூடிய அளவை விடவும் மிகவும் குறைவானவை.

அந்தப் பயிர்ச்செய்கையில் 30.4 சதவீதம் தாவர ரீதியாக பரப்பப்பட்ட தேயிலையும் (Vegetatively Propagated tea) 32.8 சதவீதம் பழைய வித்து தேயிலைப் பயிர்ச்செய்கையும் (Seedling) உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், பழைய வித்துத் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான கொடுப்பனவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும், கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் வினைத்திறனுடையாக இருக்கவில்லை என்றும் முந்திய வருடங்களில் அடையாளப்படுத்தப்பட்டதன் காரணமாக 36.8 சதவீதமான நிலப்பரப்பினை தோட்டங்களில் வசிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைத்து ஒரு கிலோ கொழுந்துக்கு குறிப்பிட்டதொரு விலையை நிர்ணயித்து விளைச்சலை கொள்வனவு செய்யும் முறையான Contract Plucking முறை சில காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் அந்த முறை மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சாதகமான வருமானம் ஏதும் கிடைக்கவில்லை.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக புதிய தேயிலை பயிரிடப்பிடவில்லை என்பதுடன், இருக்கின்ற பயிர்ச்செய்கை உரிய முறையில் நிர்வகிக்கப்படவில்லை என்பதும் உறுதியானது. மேலே குறிப்பிட்டுள்ள தரவுகளைக் கருத்திற்கொண்டு கூட்டுத்தாபனத்தை இலாபகரமான நிலைமைக்குக் கொண்டு வந்து நிலைபேறான அரச முயற்சியாக விருத்திசெய்வதற்ககாக தேயிலைப் பயிர்ச்செய்கையை மீண்டும் மேம்படுத்தி மாதாந்த பச்சைத் தேயிலைப் பயிர்ச்செய்கையை குறைந்தது 1,250,000 கிலோ வரை அதிகரிப்பது அவசியம் என இனங்கண்டு மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைவாக, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 10.75 ஹெக்டயர் நிலப்பரப்பில் புதிய தேயிலை பயிர்ச்செய்கையும் மீள்பயிரிடலும் (New Planting/ Re- Planting and Infilling) ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன், 2022 ஆம் ஆண்டிலிருந்து பாரியளவிலான தேயிலைப் பயிர்ச்செய்கையை இலக்காகக்கொண்டு ஒரு சில தோட்டங்களில் அடிப்படை தேயிலை நாற்று மேடைகள் (Tea Nurseries) ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக உற்பத்தியாகின்ற அனைத்து பச்சைத் தேயிலைக் கொழுந்துகளையும் வெளித்தரப்பினர்களுக்கு விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளிலேயே தரத்தில் உயர்ந்த தேயிலைக் கொழுந்தினை உற்பத்தி செய்வதே முகாமைத்துவத்தின் பிரதான இலக்காகும். அந்த வகையில், கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரன அவர்களின் தலையீட்டில் 2021 இல் தேயிலைத் தொழிற்சாலைகளில் நவீன தொழிநுட்பத்தினை

இணைத்துக்கொள்வதற்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 14 மில்லியன் ரூபாவினை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கோமரைத் தொழிற்சாலையை (ஓதோடொக்ஸ் வகை தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்ற தொழிற்சாலை) நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி மீண்டும் நிறுவுவதற்காக வழங்கப்பட்டது. இதன் மூலம், வருடம் முழுவதும் நிலையான முடிவுத் தேயிலை வருமானத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே, 2021 இல் தேயிலை மீள்பயிரிடல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தவும் நிர்வகிக்கவும் 47.34 மில்லியன் ரூபா செலவிடப்படுவதுடன் அதில் 33.3 மில்லியன் ரூபா கூட்டுத்தாபனம் உழைத்த பணத்திலிருந்து செலவிடப்பட்டது.

கடந்த சில வருடங்களாக 01 கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் உற்பத்திச் செலவு அதிகரித்ததமையே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நட்டமடைவதற்கான பிரதான காரணமாகும். மொத்த உற்பத்திச் செலவில் 48.47 சதவீதம் தோட்டங்களின் நிர்வாக செலவுகளாகும். இந்நிர்வாகச் செலவினங்களை அன்றாடம் உன்னிப்பாகக் கண்காணித்து செலவுகளைக் கட்டுப்படுத்தி தேவையான நிர்வாகச் செலவினங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், எதிர்காலங்களில் இலாபம் உழைப்பதற்காக குறித்த நிர்வாக செலவுகளை ஈடுசெய்யும் விதத்தில் வருமானத்தை அதிகரிப்பது அத்தியாவசியமானது என கருதி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதிய அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் ரூபா. 1,000 வரை அதிகரித்ததுடன், அதற்கேற்ப ஒரு தொழிலாளருக்காக நாளாந்தம் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுடன் ரூபா. 1,150 செலவாகின்றது. அரசாங்கத்தின் தீர்மானத்துடன் இணங்கி மார்ச் மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட தொழிலாளர் சம்பளத்தை வழங்குவதற்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப, 2021 மார்ச் மாதம் முதல் நிறுவனத்தின் மொத்தச் செலவு 34.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

அதற்கேற்ப, 2021 ஆம் ஆண்டினுள் புதிதாக அதிகரித்த தொழிலாளர் சம்பளத்திற்காக உறப்பட வேண்டியிருந்த மொத்த செலவு 147.30 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அவ்வாறு அதிகரித்த சம்பளத்திற்குரிய செலவினை முழுமையாக நிறுவனத்தினால் குறித்த வருடத்தில் சம்பாதித்த வருமானத்திலிருந்து மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 ஆம் ஆண்டில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மொத்தச் செலவு தொழிலாளர் சம்பள அதிகரிப்புடன் அதிகரித்தாலும் திறைசேரிக்கு சுமையாக இருக்காது, திறைசேரியிலிருந்து எந்த விதமானமொரு தொகையைம் எடுக்காது முகாமைத்துவம் செய்துகொள்ள முடிந்ததமை நிறுவனம் எய்த ஒரு வெற்றியாகும்.

இந்த வருடத்தினுள் செலுத்தாது நிலுவையாக இருந்த பழைய நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்காக நீதிமன்றங்களில் தாக்கலிடப்பட்டிருந்த வழக்குகளுக்காக ரூபா. 25.06 மில்லியன் செலுத்த வேண்டியிருந்ததுடன், அவ்வாறு தாக்கலிட்டிருந்த வழக்குகளுள் 116 வழக்குகளை முடிவுறுத்த முடியுமானது. என்றாலும், அப்போது வரையில் செலுத்தப்படாதிருந்த நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு எதிராக புதிதாக கிட்டத்தட்ட 80 வழக்குகள் தாக்கலிடப்பட்டிருந்தன.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த கடன் மற்றும் கடன் மேலதிகப் பற்றுக்காக இந்த வருடத்தினுள் செலுத்தப்பட வேண்டியிருந்த மொத்த வட்டி ரூபா. 27.09 மில்லியனாகும். மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் இந்த வருடத்திலும் தற்போது கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் சார்பான ஒரு மாதத்திற்குரிய

நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை மாத்திரமே செலுத்தக்கூடியதாக இருந்தமை கவலைக்குரிய விடயமாகும். இதற்கான காரணம், ஒரே தடவையில் தொழிலாளர் சம்பளம் அதிகரித்து நிறுவனத்தின் செலவுகள் 34.5 சதவீதத்தினால் அதிகரித்தது மாத்திரமன்றி பழைய நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி வட்டிகள் என்பவற்றை செலுத்த வேண்டி ஏற்பட்டதாகும். இவ்வாறான அனைத்து செலவுகளும் நிறுவனத்தினால் வருடாந்தம் உழைத்த பணத்திலிருந்தே உறப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் மொத்த நட்டம் 249 மில்லியனாக இருந்ததுடன், முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் அது ஒரு அதிகரிப்பாகும். என்றாலும், 2021 ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்படாத தொழிலாளர் சம்பள அதிகரிப்பு இல்லாதிருந்தால், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தினை பாரியளவு குறைத்துக்கொள்ள முடியுமானது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

2021, ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் இரசாயனப் பசளையின் பாவனை முற்றாகவே நிறுத்தப்பட்டதன் காரணமாக தோட்டங்களில் உரிய முறையில் பசளைகளை பாவிக்க முடியாதிருந்தது. அவ்வாறிருப்பினும், பசளை செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பசளைகளை அதிகபட்சம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாறான தடைகளுக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டினுள் 2020 ஆம் ஆண்டினை விட அதிகமான பச்சைக் கொழுந்து விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் புதியதொரு தொலைநோக்கின் கீழ் முகாமைத்துவம் செய்ததன் பெறுபேறாகும் என்பதில் ஐயமில்லை. 2021 இல் கிடைத்த விளைச்சல் 2013 இன் பின்னர் கிடைத்த ஆகக்கூடிய விளைச்சலாகும்.

முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் 2021 இல் கிடைத்த மொத்த பச்சைக் கொழுந்து விளைச்சல் 8,385,002 கிலோ கிராமாகும். இவ்வாறு கிடைத்த விளைச்சலில் கிட்டத்தட்ட 3,072,360 கிலோ கிராம் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்பட்டதாகும். அந்த வகையில், உற்பத்தி செய்யப்பட்ட முடிவுத் தேயிலை ஏறத்தாழ 660,723 கிலோ கிராம் ஆகும். அது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 3.38% மற்றும் 3.54% அதிகரிப்பாகும். வழங்கக்கூடியதாக இருந்த நிதி நிலைமையின் கீழ் முறையான உரப் பாவனை, ஏனைய விவசாய உள்ளீடுகளின பயன்பாடு மற்றும் அதிக மேற்பார்வை போன்ற நடவடிக்கைகளின் பெறுபேறாகவே இந்த அடைவினை அடையக்கூடியதாக இருந்தது.

2021 இல் உற்பத்திச் செலவு ரூபா. 1,033,504,673 ஆக இருந்ததுடன், அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.01% அதிகரிப்பாகும். அதற்கான பிரதான காரணம் தொழிலாளர்களின் சம்பளம் 34 சதவீதத்தினால் அதிகரித்தமையாகும். அத்துடன், தேறிய சராசரி விற்பனை 460.43 ஆக இருந்தது. இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அப்பெறுமதி 5.71% ஆக அதிகரித்துள்ளது.

2021 இலும் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமையில் பல மாதங்களாக நீடித்த பயணக்கட்டுப்பாடு, சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் அரச சுற்றுநிருபங்களைப் பின்பற்றி தோட்டங்கள் மற்றும் பிரதான அலுவலகம் உட்பட அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் தடைகளின்றி தொடர்ந்து கொண்டு நடாத்த முடிந்தது.

அத்துடன், வன முகாமைத்துவத் திட்டத்திற்கேற்ப (Forestry Management Plan) 2021 இல் உரிய பெறுகை முறைகளைப் பின்பற்றியும் அரச நிறுவனங்களிலிருந்து பெற்ற மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கேற்பவும் மரத்தளபாடம் பிரித்தெடுத்தலை மேற்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன்,

அதன் மூலம் வருடாந்தம் உழைத்த வருமானம் ரூபா. 108.59 மில்லியனாக இருந்ததுடன் அகற்றப்பட்ட வெட்டுமரங்களின் எண்ணிக்கை 1,902 ஆகும்.

கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன "கூட்டுத்தாபனத் தேயிலை" யின் விற்பனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் 30.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது மிகவும் சிறந்த முன்னேற்றமாக இருப்பதுடன் கொவிட் நிலைமைகளிலும் அந்த உற்பத்திகளின் விற்பனையை இந்த வருடத்திலும் அதிகரித்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. உற்பத்தி விநியோகம் தொடர்பில் தெளிவானதொரு முறையைத் தயார்செய்து புதிய விற்பனைப் பிரதிநிதிகளை ஆட்சேர்த்து வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிறுவனத்தின் நிர்வாக நடைமுறையை வினைத்திறனாக்குவதற்காக உரிய முறைகளைப் பின்பற்றி வெற்றிடங்களையும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களையும் இயன்றவரையில் பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைவாக, நீண்ட காலத்தின் பிறகு பிரதிப் பொது முகாமையாளர் – பெருந்தோட்டம் எனும் பதவிக்கு நிரந்தர வகுதி அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் பிராந்திய அலுவலகங்களின் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்தவும் தோட்டங்களை மிகவும் நெருக்கமாக மேற்பார்வை செய்யவும் அந்தப் பதவி பங்களிப்பு செய்தது.

இதற்கு முன்னைய வருடங்களில் நடைபெறாத தோட்ட அதிகாரிகளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இந்த வருடத்தில் மாதாந்தம் உரிய முறையில் இடம்பெற்றதுடன் தேவைப்படும் போது தோட்டங்களைக் கண்காணித்து கூட்டங்கள் நடாத்தப்பட்டதன. அவ்வாறே, 2021 இல் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டம் என்பன உரியவாறு இடம்பெற்றன.

2021 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் எய்துள்ள நிதி மற்றும் நிர்வாக செயலாற்றுகைகளுக்கு இந்த வருடத்தினுள் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட சரியான தீர்மானங்கள் வழிகோலின. அத்துடன், கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் உள்ளடங்கலாக பணிக்குழாமின் அர்ப்பணிப்பினை பெரிதும் மதிக்கிறேன்.

அதற்கேற்ப, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக முன்வைக்கிறேன்.

சட்டத்தரணி ஸ்ரீமால் விஜேசேகர.

தலைவர்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

நிறுவனத்தின் பின்னணி

சட்ட நிலைமை :

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 1958 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், பின்னர் 1962 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மற்றும் 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டது.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சட்ட மற்றும் வரலாற்றுப் பின்னணி.

1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதுடன் விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் கையளிக்கப்படுகின்ற தோட்டங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பயிரிடப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதும், பயிர்ச்செய்கையை முறையாக முகாமைத்துவம் செய்வதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்கான பிரதான நோக்கங்களாக அமைந்திருந்தன. மேலும் காணி ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கு உரிமை மாற்றம் வழங்கப்படுவதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கான இதர நோக்கங்களாகும்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆரம்பத்திலிருந்தே அரசாங்கத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த ஒரு சில தோட்டங்களில் செயற்பட்டதால் அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை சிறந்த வகையில் நடைமுறைப்படுத்தி நிறுவனத்திற்கு மிகவும் கிட்டிய காலத்தில் சுமார் 15,000 ஹெக்டேயர் தோட்டங்களை கொள்வனவு செய்ய முடிந்தது. உறுதியானதொரு சட்டத்தினால் நிறுவப்பட்டு அதற்கமைய முறையான முகாமைத்துவத்தை பேணிச் சென்றதன் காரணமாக இவ்வளர்ச்சி ஏற்பட்டது எனக் கூறலாம்.

அதுவரை உரிமம் பெற்ற சுமார் 25 தோட்டங்களை முகாமை செய்து வந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு 1972 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் மக்கள் மயப்படுத்தப்பட்ட தோட்டங்கள் மற்றும் அதுவரை காணப்பட்ட உரிமங்களை இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களில் சுமார் 250 தோட்டங்களை விருத்தி செய்து மேம்படுத்துவதற்காக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட ஏனைய தோட்டங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டு அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பாரியளவில் விஸ்தரிக்கப்பட்டிருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை விருத்தி செய்வதற்காக முகாமைத்துவக் கட்டமைப்பினை மாற்ற வேண்டியேற்பட்டது. அதன்படி, மிகவும் வினைத்திறனும் பயனுறுதியும் மிக்கதாக தோட்டங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பிராந்திய அலுவலகங்களை நிறுவியது. அதற்கமைய தோட்டங்களின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டம் 1979 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் 2 ஆம் உறுப்புரைக்கேற்ப அதுவரை

லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பெயர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமாக திருத்தியமைக்கப்பட்டது.

மேலும், 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 6 ஆம் இலக்க உறுப்புரையின் படி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. அதற்கமைய,

அ) உரியவாறு விவசாய ரீதியாக முகாமை செய்து அதிகபட்ச பயனுறுதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தோட்டங்களில் உள்ள நிலங்களை மேம்படுத்துதல்.

ஆ) நிலத்தில் காணப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை மறுசீரமைப்புச் செய்து முறையான முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புடன் விவசாயப் பயிர்களை பல்வகைப்படுத்துதல்.

இ) விவசாயப் பொருட்களை பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்.

ஈ) தோட்டங்களில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துதல்.

உ) தோட்டங்களில் விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் இயந்திர உபகரணங்களை நிறுவி சிறந்த முறையில் பராமரித்து நடாத்திச் செல்லல்.

ஊ) பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளல்.

1980 ஆம் ஆண்டில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களின் முகாமையை வலுப்படுத்தவும், பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினை நிறுவுவதற்காகவும் பல படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அதிமேதகு சனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1980 பெப்ரவரி மாதம் பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மிகவும் அதிகாரம் கொண்ட நான்கு பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்டன. அவையாவன, S.L.S.P. C. I, II, III மற்றும் IV என்பனவாகும். 1984 ஆம் ஆண்டில் இப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி பலாங்கொடை மற்றும் மாத்தளைக்கு அண்மித்த தோட்டங்களை சிறந்த வகையில் முகாமை செய்வதற்காக மேலும் இரண்டு சபைகள் S. L. S. P. C V மற்றும் VI ஆக ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு, தோட்டங்களின் முகாமைத்துவத்தை பன்முகப்படுத்திய போதிலும், கொள்கை உருவாக்கம், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் இலங்கை அரச தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

இச் சீர்திருத்தங்களின் வினைத்திறனின்மை மற்றும் பயனுறுதியின் குறைவுத் தன்மையை உணர்ந்த பின்னர், அப்போதைய அரசாங்கத்தினால் "அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது அரச சொத்துக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை அரச கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின்" கீழ் 1992 ஆண்டு 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் நிறுவப்பட்டன. அவ்வாறான 22 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 402 இலாபமீட்டும் மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட தோட்டங்களின் முகாமைத்துவம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டன. நீண்ட காலமாக நட்டத்தில் இருந்த, மலையக மற்றும் தாழ்நிலத் தேயிலையின் சிறப்பியல்பு அம்சங்கள் இல்லாத, குறைந்த விற்பனை விலையுடைய 55 நடுத்தரப் பிரதேச தேயிலைத் தோட்டங்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு மீதமாகின. இந்த 55 தோட்டங்களில் 32 தோட்டங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு விடப்பட்டன. இந்த 32 தோட்டங்களில் 11தோட்டங்கள் வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு 1993 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, எஞ்சிய 21 தோட்டங்களை 16 தோட்டங்களாக கூட்டிணைத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த 16 தோட்டங்களுக்கு உரித்தான பெரும்பாலான நிலங்களில் பழைய விதைத் தேயிலைப் பயிர்களே இருந்தன. அத்துடன், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நக்கிள்ஸ் மலைத்தொடரைச் சுற்றி கரடுமுரடான சாய்வான மண் அடுக்கை காணப்படுகின்றது. ஆதலால், நடுத்தரப் பிரதேசத் தோட்டங்களின் தேயிலைக் கொழுந்து விளைச்சல் இயற்கையாகவே மிகவும் குறைவாகவே இருந்தது. குறைந்த விற்பனை விலை மற்றும் குறைந்த விளைச்சல் ஆகிய காரணங்களால் இப் பகுதியிலுள்ள தோட்டங்கள் நீண்ட காலமாக நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களாகும்.

அவ்வாறே, 1992 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஊழியர்களையும் ஓய்வு பெறச் செய்து அதன் பணிகளை நிறுத்தி வைக்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டில், ஒரு புதிய ஊழியர் குழாத்தை நியமித்து மீண்டும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளன. அன்றிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. மேலும், 2001 முதல் 2004 வரை நட்டத்தில் இயங்கி வந்த இக்கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு சுமையாக இருந்ததால், அரசின் சுமையை குறைக்கும் வகையில் சில தோட்டங்களும் சொத்துக்களும் நீண்ட காலக் குத்தகைக்கு விடப்பட்டன.

முதலீட்டுச் சபையின் பரிந்துரையின் பேரில், தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட வைத்தலாவை, வுட்சைட் மற்றும் ஹேயார்பார்க் தோட்டங்கள் மற்றும் கொட்டகங்கை தொழிற்சாலை போன்ற ஒரு சில திட்டங்கள் தோல்வியின் காரணமாக குத்தகைதாரர்களால் கைவிடப்பட்டன. பின்னர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு பல பொறுப்புகளுடன் ஹெயார்பார்க் தோட்டத்தையும் கொட்டகங்கை தொழிற்சாலையையும் கையகப்படுத்த வேண்டியிருந்தது. மோசமான முகாமைத்துவம் காரணமாக சீர்குலைந்து கிடக்கும் ஹெயார்பார்க் தோட்டங்கள், அத்துமீறிய கையகப்படுத்தல் மற்றும், பயிர்ச் செய்கைப் பராமரிப்பின்மை போன்ற காரணங்களினால் தோட்டங்கள் மிகவும் நட்டம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. பின்பு வைத்தலாவை மற்றும் வுட்சைட் தோட்டங்கள் வேறு தனியார் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. அந்நிறுவனத்தினால் அத்தோட்டங்களின் தவறான முகாமைத்துவம் காரணமாக வுட்சைட் தோட்டத்தை கைவிட்டு வைத்தலாவை தோட்டத்தை மட்டும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

2006 ஆம் ஆண்டு அரசாங்கக் கொள்கை மாற்றப்பட்டதோடு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டு, மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவகத்தின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு அதனை வர்த்தக ரீதியாக வலுவான அரசாங்க மூலோபாய அமைப்பாக முகாமைத்துவம் செய்யும் புதிய கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தியது. இந்த தோட்டங்களை வெறுமனே தேயிலைத் தோட்டங்களாக நிர்வகிக்கும் முறைமை மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவனத்தின் தலையீட்டால் மாற்றப்பட்டது. அதன்படி, தோட்டங்களின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் புதியதொரு எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய எண்ணக்கருவின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் அதாவது ரூபா. 3000 மில்லியன் பெறுமதியான வெட்டுமர வளங்கள், சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு சாத்தியமுள்ள இடங்கள், தோட்டங்களின் கார்பன் தட்டை கணக்கிட்டு விற்பனை செய்தல் மற்றும் நஷ்டமடையும் தோட்டங்களில் பயிர்களை பல்வகைப்படுத்துதல் போன்ற பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2007 ஆம் ஆண்டு நக்கிள்ஸ் உலக மரபுரிமைத் தளமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களின் பெரும் நிலப்பகுதி உலக மரபுரிமைக்கு உட்பட்டது. அதற்கமைய, வணிக ரீதியான காட்டுப் பயிர்களுக்கான நிலங்கள், ஏலக்காய் செய்கைக்கான நிலத்தினைப் போன்றே தேயிலைச் செய்கையின் நிலங்களும் நக்கிள்ஸ் வன ஒதுக்கத்துடன் சேர்க்கப்பட்டன. எவ்வாறாயினும், வன ஒதுக்கத்துடன் இணைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு மற்றும் எல்லைகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக தோட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வலயத்தின் முகாமைத்துவமும் சிக்கலாக மாறியது.

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிகவும் கவர்ச்சிகரமான இடங்கள்.

கெலேபொக்கை 360^0 வியுவ் பொய்ன்ட்





கெலேபொக்கை 360^0 வியுவ் பொய்ன்ட் (1,175 மீற்றர் உயரம்) பொழுதுபோக்கு நோக்கில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ள ஒரு இடமாகும். இந்த மலை உச்சியானது மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் எல்லைகளில் அமைந்திருப்பதுடன் இது ஹத்லே சிறிய உலக முடிவு மற்றும் ஹுன்னஸ்கிரிய மலை உருவாகும் ஒரே மலை உச்சிகளை பகிர்ந்துகொள்கின்றது. மலைத்தொடர் வடக்கு நோக்கி நீண்டு செல்வதுடன் நக்கிள்ஸ் இன் மேற்கு அத்திவாரத்துடன் இணைகின்றது. தெளிவாக இருக்கும் ஒரு நாளில் மத்திய மலை நாடு, கண்டி நகரம், செம்புவத்தை வாவி மற்றும் நக்கிள்ஸ் மலைக் குன்றுகள் என்பவற்றை பார்த்து இரசிக்க முடியும்.

இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கி முகாம் அமைக்கும் ஒரு தளமும் இரண்டு ஓய்வு பங்களாக்களும் உள்ளன. சமதளமாக இருக்கும் மலை உச்சியின் நடு அரைப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட இந்து ஆலயம் ஒன்றும் குச்சிகளைக் கொண்டு வேயப்பட்டிருக்கும் குடிசையும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். பகல் நேரத்தில் பிரதேசத்தினைச் சூழ பனிமூட்டம் இருப்பதால் தடைகளின்றி காட்சிகளைக் கண்டு களிப்பதற்கு காலை நேரத்தில் சஞ்சரிப்பது மிகவும் சிறந்தது.

பர்ன்ஸய்ட்





கண்டியில் அமைந்திருக்கும் பர்ன்ஸய்ட் பங்களா ரங்கள பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் சீ ப்ளேன் விமான நிலையத்திலிருந்து 13 மைல் தொலைவில் அமைந்துள்ள கவர்ச்சிகரமான இடமாகும்.

தன்கந்த வாவி - மிட்லன்ட்ஸ்





கவர்ச்சிகரமான தன்கந்தை வாவி மத்திய மாகாணத்தின் ஒரு நீர்த்தேக்கம் ஆகும். அதன் உயரம் 957 மீற்றர் ஆகும். இந்த வாவி கிரிமெடியாரன்த மற்றும் தங்கந்தவத்தைக்கு அருகே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிட்லன்ட் தோட்டத்திற்கு அருகில் அமைந்துள்ளது.


ஹுன்னஸ்கிரிய






கண்டி நகரத்திலிருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் மாத்தளை மாவட்டத்தின் அல்கட்டுவை கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரும் ஹுன்னஸ் போல்ஸ் நீர்வீழ்ச்சியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்துள்ள கவர்ச்சிகரமான இடங்களாகும். இந் நீர்வீழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டத்தினால் தேவையான வசதிகள் செய்துள்ளன.

வெவதென்னை – வுட்சய்ட்







வெவதென்னை முகாம் அமைக்கும் திடல், கண்டி நகரத்திலிருந்து 37.9 கிலோ மீற்றர் தொலைவில் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் மத்திய கண்டிப் பிரதேசத்திலுள்ள வுட்சய்ட் அரச தோட்டத்தில் அமைந்துள்ளது. இந்த அழகான முகாம் திடலுக்குச் செல்வது ஓரளவு கஷ்டமாக இருந்தாலும் அது பல இனிமையான அநுபவங்கள் நிறைந்த பயணமாகும். கண்டியிலிருந்து வெவதென்னை நோக்கி பயணிக்கும் வழியில் இருக்கும் உலகப் பிரபலமான விக்டோரியா நீர்த்தேக்கமும் மனதைக் கவரும் காட்சியாகும்.

இணைப்புத் தகவல்கள்

இணைப்பு உத்தியோகத்தர்	**: திரு. அமில ஜயவர்தன**
இணைப்பு மத்திய நிலையம்	**: பிராந்திய அலுவலகம்**
முகவரி	: பிராந்திய அலுவலகம், கல்பிஹில்லை, பன்விலை.
தொலைபேசி இலக்கம்	: 081-5634903
தொலைநகல் இலக்கம்	: 081-5634902
மின்னஞ்சல் முகவரி	: regionalofficegp@gmail.com

2021 ஆம் ஆண்டினுள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களின் நிலைமை.

2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமையின் கீழ் 15 தோட்டங்கள் இருந்ததுடன், அவற்றுள் 14 தோட்டங்கள் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்திருப்பதுடன், வலஹந்துவைத் தோட்டம் காலி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அட்டவணை 01 – தோட்டங்களின் விபரம்

இல	தோட்டத்தின் பெயர்	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	மொத்த நிலப்பரப்பு (ஹெ.)
1	அலகொல்லை	கண்டி	பன்விலை	819.86
2	கொடகங்கை	கண்டி	மெததும்பரை	1,059.81
3	கல்பிஹில்லை	கண்டி	பன்விலை /குண்டசாலை	761.24
4	கோமரை	கண்டி	பன்விலை	731.13
5	பாகலை	கண்டி	பன்விலை	449.49
6	ஹெயார்பார்க்	கண்டி	உடுகும்புரை	976.75
7	ஹுன்னஸ்கிரிய	மாத்தளை	உக்குவளை	739.72
8	கெலேபொக்கை	கண்டி	பன்விலை	1,370.36
9	குடாஓய	மாத்தளை	ரத்தொட்டை	176.00
10	மிட்லன்ட்	மாத்தளை	ரத்தொட்டை	1,221.31
11	நிகோலோய	மாத்தளை	ரத்தொட்டை	332.41
12	ஓபல்கலை	மாத்தளை	மெததும்பரை	723.10
13	ரங்களை	கண்டி	மெததும்பரை	630.60
14	வைதலாவை	கண்டி	மெததும்பரை	551.05
15	விஹாரகலை	பதுளை	ஹல்துமுல்லை	41.90
16	வுட்சய்ட்	கண்டி	மெததும்பரை	472.75
17	வலஹந்துவை	காலி	அக்மீமனை	95.22
	மொத்தம்			**11,152.70**

அட்டவணை 02 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்துள்ள தோட்டங்கள்

இல.	தோட்டம்	கொள்வனவு செய்த திகதி	நிலப்பரப்பு (ஹெ)
1	ஹபுகஸ்தன்னை	1/1/1972	1,709.31
2	அலுபொலை	1/1/1972	1,228.74
3	கலபொடை	1/1/1972	376.92
4	ஹல்கொல்லை	1/1/1972	1,006.88
5	ராஸ்ஸகலை	1/1/1972	776.49
6	விகிலிய	1/1/1972	805.67
7	திஸ்பனே	1/1/1972	384.62
8	மெதகந்தை	1/1/1972	676.11
9	சோகமை	1/1/1972	476.11
10	மதுரட்டை	15/05/1975	278.54
11	மடுவலை	1/6/1973	659.51
12	அய்ஸ்லெப்	26/11/1973	382.59
13	வெதமுல்லை	1/9/1973	484.62
14	இறம்பொடை	1/9/1973	765.18
15	கிரேவிவெளி	1/1/1974	320.24
16	தென் மெததும்பரை	1/2/1974	505.26
17	கெரோலினா	1/7/1974	1,063.56
18	கல்லேபொத்த	1/7/1974	752.63
19	கெதன்ட்	1/7/1974	203.24
20	சனட்ஹெலியர்	1/7/1974	172.87
21	ரொஹுமெப்டன்	15/3/1974	100.61
22	நன்பேரியல்	11/4/1974	203.64
23	உடபொலை	27/5/1975	278.54
24	டெல்கின்	19/5/1975	1,223.38
25	எல்பிடிய	1/6/1975	785.02
26	கலஹ - சில்க் ப்ரஜக்ட்	1/7/1975	694.33
27	ஹொட்வில்	1/7/1975	412.15
28	கெம்பியன்	1/7/1975	848.99
29	எஹலியகொடை	1/8/1975	410.93
30	சபுமல்கந்தை	1/8/1975	646.96
31	தியதாவை		280.57
மொத்தம்			**18,914.21**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தனது மூலதனத்தைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்டுள்ள தோட்டங்களைக் கொள்வனவு செய்துள்ளது. அந்த அனைத்துத் தோட்டங்களும் 1992 ஆம் ஆண்டின் தனியார்மயமாக்கல் கொள்கையின் கீழ் பெருந்தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவத்திற்குட்பட்டது. ஆதலால், குறித்த எந்தச் சொத்திலிருந்தும் எமது கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை.

அட்டவணை 03 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கிடைத்த காணிகள்

வர்த்தமானி இல.	திகதி	கிடைத்த விதம்	தோட்டங்களின் எண்ணிக்கை		பெயரளவு மதிப்பு
			பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	
150/12	7/24/1981	காணிகள் மறுசீரமைப்பு ஆணைக் குழு	38	0	இல்லை
181/12	2/27/1989		55	25	இல்லை
815/10	4/21/1994		122	1	123
195/6	5/31/1982		6	8	123
569/14	8/2/1989		3	0	123
571/14	8/14/1989		1	0	123
206/15	8/20/1982		0	1	123
230/12	2/2/1983		1	0	123
937/2	8/19/1996		8	0	123
157/13	4/3/1975	அரசு	5	0	123
439/18	2/6/1987		0	1	123
மொத்தம்			**239**	**36**	

மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குவினாலும் வெவ்வேறு அரச நிறுவனங்களாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு தோட்டங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைத்துள்ள தோட்டங்களின் எண்ணிக்கை 275 ஆகும்.

அட்டவணை 04 – அரசாங்கத்தின் வெவ்வேறு நிறுவனங்கள் மூலமாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த காணிகள்

தோட்டம்	கிடைத்த விதம்	கிடைத்த திகதி	நிலப்பரப்பு (ஹெ.)
ஹிக்கொடை	காணி ஆணையாளர்	1/10/1960	319.81
ரதெல்லை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	633.60
யடவத்தை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	522.67
நெலஉலை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	337.65
பல்லேகலை	காணி ஆணையாளர்	1/1/1968	1270.04
மொத்தம்			**3,083.77**

மேலே குறிப்பிட்டுள்ள அரசுக்குச் சொந்தமாகவிருந்த காணிகளை 1958 ஆம் ஆண்டு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்துக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் அதன் மூலதனத்தைப் பயன்படுத்தி பெருந்தோட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை 05 – தோட்டங்களின் நிலப் பயன்பாடு 2021

ஹெக்டயருக்கான கூற்று, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2021											
தோட்டம்	தேயிலை பயிரிடப்பட்ட காணியின் பரப்பு (ஹெக்டயர்)					இறப்பர் (ஹெ.)		சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (ஹெ.)	வெட்டுமரப் பயிர்ச்செய்கை	வேறு (ஹெ)	மொத்த நிலப்பரப்பு (ஹெ.)
	தேயிலை வருமானம்		ஒப்பந்த அடிப்படையில் கொழுந்து பறிப்பதற்கு வழங்கியுள்ள காணியின் பரப்பு	தேயிலை நாற்று	மீள்பயிரிடல்	பழைய இறப்பர் பயிர்ச்செய்கை	இறப்பர் மீள் பயிரிடல்		எரிபொருளுக்கான வெட்டுமரம்		
	தேயிலை நாற்று	தளிர் தேயிலை	தேயிலை நாற்று								
அலகொல்லை	155.75	114.95	124.50	1.00	13.00	-	-	68.60	76.38	265.68	**819.86**
கொட்டகங்கை	264.46	34.42	141.31	0.40	3.00	-	-	60.69	24.14	531.39	**1,059.81**
கல்பிஹில்லை	5.00	165.01	37.31	2.21	7.04	-	-	32.64	70.21	441.82	**761.24**
கோமரை	96.85	116.73	136.61	-	9.00	-	-	74.80	53.30	243.84	**731.13**
பாகலை	77.78	101.80	84.66	0.42	7.00	-	-	1.00	89.62	87.21	**449.49**
ஹெயாபர்க்	164.50	-	183.50			-	-	60.00	-	568.75	**976.75**
ஹ்ன்னஸ்கிரியை	153.14	37.78	34.21	0.60	2.00	-	-	74.77	7.00	430.22	**739.72**
கெலேபொக்கை	112.22	278.24	282.41	1.21	17.50	-	-	534.94	15.00	128.84	**1,370.36**
குடாஓய	-	-	36.00	-	-	-	-	-	-	-	**36.00**
மிட்லன்ட்	104.42	117.41	57.17	1.34	10.00	-	-	271.79	218.84	440.34	**1,221.31**
நிகோலோய	-	47.14	2.43		-	-	-	58.89	18.00	205.95	**332.41**
ஓபல்கலை	36.10	48.90	13.00	1.80	-	53.00	-	170.50	68.00	331.80	**723.10**
ரங்களை	124.10	85.44	112.70	2.00	5.00	-	-	11.50	152.52	137.34	**630.60**
வைதலாவை	39.20	34.00	74.69		-	-	-	62.06	47.39	293.71	**551.05**
வலஹந்துவை	0.30		-	-	4.00	62.56	-	4.00	-	25.36	**96.22**
விஹாரகலை	0.81	41.09	-	-		-	-	-	-	-	**41.90**
வுட்சய்ட்	-	-	203.31	0.20	5.00	-	-	42.69	38.10	183.45	**472.75**
மொத்தம்	**1,334.63**	**1,222.91**	**1,523.81**	**11.18**	**82.54**	**115.56**	**-**	**1,528.87**	**878.50**	**4,315.70**	**11,013.70**

அட்டவணை 06 - தோட்டங்களின் பிரதான வருமானப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சலினை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல்.

தோட்டம்	தேயிலை - பச்சைக் கொழுந்து (கிலோ கிராம்)									
	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
அலகொல்லை	952,633	880,458	769,499	787,217	705,364	759,745	734,923	617,413	755,844	812,281
கொடகங்கை	370,453	258,308	194,663	216,383	170,940	205,002	293,452	253,262	303,817	298,549
கல்பில்லை	879,545	880,379	665,646	690,856	675,717	775,779	790,235	681,020	833,568	897,867
கோமரை	566,360	574,639	486,583	547,711	667,328	764,337	743,270	706,865	849,230	920,770
பாகலை	843,579	774,142	682,702	682,097	429,360	482,980	547,672	412,474	578,153	586,514
ஹெபாரக்	399,609	463,485	375,497	298,837	229,330	252,911	298,088	252,867	362,826	349,541
ஹுன்னஸ்கிரிய		520,190	431,449	578,320	515,374	528,226	496,959	487,032	544,822	556,800
கெலேபொக்கை	2,006,814	1,762,933	1,331,815	1,608,769	1,373,408	1,382,689	1,468,809	1,435,669	1,780,625	1,911,748
குடாஓய	-	-	-	-	-	-	-	2,581	18,791	20,558
மிட்லண்ட்	669,558	730,241	395,511	586,442	438,614	503,015	586,207	494,211	520,382	518,951
நிகோலோய****			458	1,122	1,550	2,979	159,993	138,379	191,445	187,163
ஓபல்கலை	369,158	430,719	297,287	301,755	247,751	305,494	354,023	263,246	399,514	347,170
ரங்கலை	739,211	658,274	521,922	678,266	604,332	492,346	606,262	579,595	662,545	641,661
வைதலாவை***							228,362	157,356	211,812	249,160
விஹாரகலை	-	-	-	-	-	-	-	9,267	20,116	25,471
வுட்ஸய்ட்**							22,153	44,463	68,485	60,799
மொத்தம்	**7,796,920**	**7,933,768**	**6,153,032**	**6,977,775**	**6,059,068**	**6,455,503**	**7,330,409**	**6,535,701**	**8,101,974**	**8,385,002**


தோட்டம்	*இறப்பர் - ஒட்டுப்பால் (கிலோ கிராம்)									
	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
வலஹந்துவை	39,218	44,861	40,140	36,809	37,522	42,470	33,395	28,122	29,660	19,063

**** நிகோலோய அரசத் தோட்டம் 2010 - 2013 முதல் மிட்லன்டஸ் உடன் கூட்டிணைக்கப்பட்டது .

*** வைதலாவை அரச தோட்டம் 2008 - 2017 முதல் மருடி கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்றது.

** 2018 ஆம் ஆண்டுக்கு முன் வுட்சய்ட் தோட்டம் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டது.

* இறப்பர் பாலின் DRC பெறுமானம் கிலோ கிராமுக்கு மாற்றப்பட்டுள்ளது. (Dry Rubber Content)



உரு 03 – பச்சைத் தேயிலைக் கொழுந்து விளைச்சல் – கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்




உரு 04 – இறப்பர் விளைச்சல், கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்


அட்டவணை 07 – ஒரு ஹெக்டெயருக்கு கிடைத்த பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் இறப்பர் (ஒட்டுப்பால்) விளைச்சல் 2012 - 2021

தோட்டம்	பச்சைக் கொழுந்து - ஹெக்டயருக்கு கிலோ கிராம்.									
	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
அலகொல்லை	2,856	2,660	2,321	2,293	2,121	2,479	2,367	2,032	2,513	2,692
கொடகங்கை	1,316	1,400	1,060	860	819	935	930	809	1,028	922
கல்பிஹில்லை	4,009	3,819	2,926	2,981	2,916	3,656	3,901	3,362	4,183	5,257
கோமரை	3,474	3,363	3,121	3,363	3,084	3,451	3,139	3,027	3,677	4,359
பாகலை	3,595	3,223	2,772	2,716	2,447	2,781	2,883	2,241	3,141	3,170
ஹெயார்பார்க்	1,274	1,633	1,274	995	674	795	1,260	1,102	1,491	1,506
ஹுன்னஸ்கிரியை	3,321	2,828	2,181	2,744	2,749	2,823	2,599	2,548	2,844	2,900
கெலேபொக்கை	3,479	3,079	2,353	2,828	2,888	2,777	2,651	2,553	3,617	3,986
குடா ஓய	-	-	-	-	-	-	-	70	488	571
மிட்லன்ட்	2,498	2,460	2,084	2,167	1,995	2,293	2,585	2,204	2,334	2,321
நிகோலோய	-		1,772	1,702	2,544	2,884	3,218	2,860	3,715	3,901
ஓபல்கலை	3,619	3,972	2,944	2,814	2,309	2,940	4,013	2,999	4,317	4,021
ரங்களை	3,772	3,256	2,553	3,247	2,916	2,316	2,581	2,660	2,723	2,869
வைதலாவை	-	-	-	-	-	-	2,688	2,093	2,894	3,132
விஹாரகலை	-	-	-	-	-	-	-	223	480	608
சராசரி	**3,042**	**2,828**	**2,298**	**2,433**	**2,386**	**2,474**	**2,537**	**2,282**	**2,768**	**2,949**

தோட்டம்	* இறப்பர் ஒட்டுப்பால் - ஒரு ஹெக்டயருக்கு கிலோகிராம்									
	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
வலஹந்துவை	603	690	618	566	577	649	510	430	474	272



உரு 05 – ஒரு ஹெக்டெயருக்கான பச்சைக் கொழுந்து விளைச்சல் (2012-2021)



உரு 06 – ஒரு ஹெக்டெயருக்கான இறப்பர் விளைச்சல் (2012 – 2021)

அட்டவணை 08 – மேற்கு மத்தியப் பிரதேச வலயத்தின் மழைவீழ்ச்சி – 2021

மேற்கு மத்தியப் பிரதேசத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி 2021	
தோட்டம்	மழைவீழ்ச்சி (மி.மீ)
அலகொல்லை	2364
கொடகங்கை	2790
கல்பிஹில்லை	3810
கோமரை	2816
பாகலை	2805
ஹெயார்பார்க்	3551
ஹுன்னஸ்கிரியை	1727
கெலேபொக்கை	3934
குடாஓய	2483
மிட்லன்ட்	3106
நிகோலோய	2761
ஓப்கலை	2432
ரங்களை	5184
வைத்தலாவை	2231

மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைவாக 2021 வருடம் முழுவதும் மேற்கு மத்தியப் பிரதேச வலயத்திற்கு சிறந்த மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

கடந்த 03 வருடங்களுக்கான உரப் பாவனை

அட்டவணை 09 - கடந்த 03 வருடங்களுக்கான உரப் பாவனை


ஆண்டு	பயன்படுத்தப்பட்ட உரம்	உரத்திற்கான செலவு (ரூ.)	பயன்படுத்தப்பட்ட களைகொல்லி (லீற்றர்/கி.கி)	களை கொல்லிக்கான செலவு (ரூ)
2019	215	4,794,653	3207 லீற்றர்	14,431,500
2020	350	8,548,750	5156 லீற்றர்	22,740,604
2021	552	15,924,100	3844 லீற்றர்	10,222,571
			692 கிலோ கிராம்	2,698,800

2021 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்தின் ஒரு கிலோ கிராமுக்கான விற்பனை விலை 89.74 ரூபாவாக இருந்ததுடன், மேற்கு மத்திய வலயத்தின் பச்சைத் தேயிலைக் கொழுந்திற்கான விற்பனை விலை 78.28 ஆகும். 2021 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விகிதமானது மேற்கு மத்திய வலயத்தின் விற்பனை விகிதத்தினை விட 11.46 ரூபாவினால் கூடுதலான பெறுமதியில் பேணப்பட்டுள்ளது.

கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் பச்சைக் கொழுந்து ஒரு கிலோ கிராமுக்கான உற்பத்திச் செலவு

அட்டவணை 10 - கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு.

வருடம்	ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கான உற்பத்திச் செலவு (ரூபாய்)					
	கொழுந்து பறித்தல்	கள வேலை	உரம்	களை கொல்லி	பொதுச் செலவுகள்	மொத்தம்
2019	45.34	18.34	2.15	12.34	44.19	122.36
2020	45.47	15.44	2.18	9.96	39.18	112.23
2021	47.94	12.61	5.02	6.00	32.78	104.35



உரு 07 - கடந்த 03 வருட காலத்தினுள் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ பச்சை தேயிலைக் கொழுந்ததிற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு

அதற்கேற்ப, ஒரு கிலோகிராம் பச்சைக் கொழுந்திற்கான மொத்த உற்பத்திச் செலவில் உரத்திற்கான செலவு மிகவும் குறைவாகும். உற்பத்திச் செலவில் பெரும் பங்கினை வகிக்கும் கொழுந்து பறித்தல் மற்றும் ஏனைய பொதுச் செலவுகளை முகாமை செய்யாது உரத்திற்கான செலவினைக் கட்டுப்படுத்தியிருப்பதனால் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் குறைந்துள்ளது. நிர்வாக அதிகாரிகள் மற்றும் முகாமை இந்நிலைமைகளை அறிந்துகொள்ள தவறியமை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நீண்டகால நட்டத்திற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.


தேயிலை உற்பத்தி

தற்போது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு தேயிலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் 10 சொந்தமாக இருப்பதுடன், அவற்றுள் சீ.ரீ.சீ தேயிலைத் தொழிற்சாலைகள் மூன்று மாத்திரம் இயங்கு நிலையிலுள்ளன. அந்த வகையில், எமது பல தோட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற பச்சைத் தேயிலைக் கொழுந்துகளிலிருந்து கெலேபொக்கை, மிட்லன்ட் மற்றும் ரங்களை ஆகிய மூன்று தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. கீழுள்ள அட்டவணையில் குறித்த தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலையின் அளவு காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 11 - முடிவுத் தேயிலை உற்பத்தி 2020 – 2021

தொழிற்சாலை	பச்சைத் தேயிலைக் கொழுந்து (கி.கி)		முடிவுத் தேயிலை (கி.கி)		உற்பத்திசெய்யப்பட்ட முடிவுத் தேயிலை சதவீதமாக		உற்பத்திச் செலவு - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.		தேறிய சராசரி விற்பனை - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.	
	2020	2021	2020	2021	2020	2021	2020	2021	2020	2021
கெலேபொக்கை	1,742,062	1,765,256	382,930	405,796	21.98	22.99	655.26	723.99	453.69	444.21
மிட்லன்ட்	506,119	514,909	111,910	112,300	22.11	21.81	610.65	666.40	409.48	390.51
ரங்களை	642,059	604,650	142,483	146,498	22.19	24.23	604.41	635.23	469.82	435.15
மொத்தம்	**2,890,240**	**2,884,815**	**637,323**	**664,594**						





உரு 08 – முடிவுத் தேயிலை உற்பத்தி



உரு 09 – தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி

அட்டவணை 12 – தொழிற்சாலைகள் பற்றிய விபரம்

தொழிற்சாலைகள்	அமைந்துள்ள மாவட்டம்	உற்பத்தி செய்யும் தேயிலை இனம்	கொள்ளளவு (கிலோ கிராம்) பிரித்தெடுக்கை (Sifting)	தற்போதைய நிலை
கொடகங்கை	கண்டி	ஒதடொக்ஸ்	1290	தொழிற்படுவதில்லை
கோமரை	கண்டி	ஒதடொக்ஸ்	8000 (மொத்த கொள்ளளவு)	தொழிற்படுவதில்லை
பாகலை	கண்டி	ஒதடொக்ஸ்	1419	தொழிற்படுவதில்லை
ஹுன்னஸ்கிரியை	மாத்தளை	சீ.டீ.சீ	1720	தொழிற்படுவதில்லை
கெலேபொக்கை	கண்டி	சீ.டீ.சீ	12000(மொத்த கொள்ளளவு)	தொழிற்படுகின்றது
மிட்லன்ட்	மாத்தளை	சீ.டீ.சீ	1400	தொழிற்படுகின்றது
தன்கந்தை	மாத்தளை	ஒதடொக்ஸ்	860	தொழிற்படுவதில்லை
நிகோலோய	மாத்தளை	ஒதடொக்ஸ்	645	தொழிற்படுவதில்லை
ரங்களை	கண்டி	சீ.டீ.சீ	1500	தொழிற்படுகின்றது

எமது தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு மிகவும் உயர்வாக இருப்பதாலும், எமது உற்பத்திகளுக்கு மிகவும் குறைந்த விற்பனை விலை கிடைப்பதனாலும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நாளுக்கு நாள் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது.

அனுபவம் வாய்ந்த, பயிற்சி பெற்ற முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஊழியர் குழாத்துடன் தொழிற்படும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பச்சைக் கொழுந்துகள் மற்றும் முடிவுத் தேயிலைக்கு நடுத்தரத் தேயிலைக்கு இருக்கும் சராசரி விலையை விட குறைவான விலை இருப்பது வருந்தத்தக்கது.

மிட்லண்ட்ஸ் தொழிற்சாலை மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு தேயிலை CTC தொழிற்சாலையாகும் என்பதோடு கெலாபொக்கை மற்றும் ரங்களை தொழிற்சாலைகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளன.

மிட்லன்ட்ஸ் தேயிலைத் தொழிற்சாலை



கெலேபொக்கை தேயிலைத் தொழிற்சாலை



ரங்களை தேயிலைத் தொழிற்சாலை



நவீனமயப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள கோமரைத் தொழிற்சாலை











கூட்டுத்தாபனத் தேயிலை

உள்நாட்டுச் சந்தைக்குக் கூட்டுத்தாபனத்தின் தேயிலையை வழங்குவதனூடாக கூட்டுத்தாபனத்தின் தேயிலை விலைக்கு ஏலத்தில் வழங்கப்படுகின்ற ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் தற்காலிக நிதிப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து "கூட்டுத்தாபனத் தேயிலை" ("සංස්ථා තේ") உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.



அட்டவணை 13 – கூட்டுத்தாபனத் தேயிலை – அளவு ரீதியான ஒப்பீடு (2019-2021)

மாதம்	விற்பனையான அளவு (கி.கி)		
	2019	2020	2021
ஜனவரி	2,602	2,788	5,234
பெப்ரவரி	4,636	2,675	3,695
மார்ச்	2,789	3,275	6,103
ஏப்ரல்	939	3,709	2,619
மே	2,475	2,878	7,592
ஜூன்	1,134	2,921	4,420
ஜூலை	3,270	5,587	5,436
ஆகஸ்ட	2,683	4,472	3,988
செப்டம்பர்	3,159	2,617	5,242
ஒக்டோபர்	3,043	4,859	5,227
நவம்பர	4,313	3,846	4,089
டிசம்பர்	3,032	5,750	6,685
மொத்தம்	**34,075**	**45,375**	**60,330**




	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட	செப்டம்பர்	ஒக்டோபர்	நவம்பர	டிசம்பர்
2019	2,602	4,636	2,789	939	2,475	1,134	3,270	2,683	3,159	3,043	4,313	3,032
2020	2,788	2,675	3,275	3,709	2,878	2,921	5,587	4,472	2,617	4,859	3,846	5,750
2021	5,234	3,695	6,103	2,619	7,592	4,420	5,436	3,988	5,242	5,227	4,089	6,685

உரு 10 – கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை – அளவு ரீதியான ஒப்பீடு (2019 – 2021)

அட்டவணை 14 – கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (2019 - 2021)

மாதம்	கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம்		
	2019	2020	2021
ஜனவரி	1,948,166	1,543,704	3,869,097
பெப்ரவரி	3,210,598	1,975,437	2,712,282
மார்ச்	2,117,157	1,352,505	4,403,836
ஏப்ரல்	747,593	1,492,498	1,937,444
மே	1,661,434	2,158,450	5,383,608
ஜூன்	939,405	2,249,149	3,144,305
ஜூலை	2,490,901	4,081,756	3,928,085
ஆகஸ்ட	2,080,813	3,294,264	2,916,045
செப்டம்பர்	2,261,770	2,008,403	3,819,845
ஒக்டோபர்	2,139,277	3,561,445	3,795,002
நவம்பர	3,112,667	2,833,044	3,212,859
டிசம்பர்	2,345,364	4,267,934	5,097,536
மொத்தம்	**25,055,143**	**30,818,588**	**44,219,943**




உரு 11 – கூட்டுத்தாபனத் தேயிலை மாதாந்த விற்பனை வருமானம் (2019 – 2021)

இறப்பர் உற்பத்தி

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு இறப்பர் தோட்டம் மட்டுமே சொந்தமாக இருந்தது. அது காலி மாவட்டத்தின் வலஹந்துவை பிரதேசத்தில் அமைந்துள்ளது. மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் பால் உற்பத்தி கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 15 – மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் உற்பத்தி

வருடம்	ஒட்டுப்பால் (கி.கி)	மொத்தச் செலவு (கி.கி)	இலாபம் / (நட்டம்) (ரூ.)	தேறிய விற்பனைப் பெறுமதி (ரூ.)	உற்பத்திச் செலவு ஒரு கிலோ கிராமுக்கு (ரூ.)	ஒரு கிலோ கிராமுக்கு இலாபம் / (நட்டம்) (ரூ.)
2021	19,063	13,117,780.90	(5,286,725.15)	410.80	688.13	(277.33)
2020	29,660	13,494,113.60	(5,151,942.00)	281.26	454.96	(173.70)
2019	28,122	14,686,995.72	(7,806,787.00)	300.00	522.26	(222.26)



உரு 12 – இறப்பர் உற்பத்தி (2019 – 2021)

திறைசேரி ஏற்பாடுகள்

இவ்வருடம் கடந்த வருடத்தைப் போன்று சம்பளம் மற்றும் அன்றாடச் செலவுகளை முகாமை செய்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

அட்டவணை 16 – இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்ட நிதி ஒதுக்கீடுகள் பற்றிய சாராம்சம்

விபரம்	2017	2018	2019	2020	2021	2022
தொழிற்பாட்டுச் செலவுகள் (தொழிலாளர் மற்றும் ஆளணி சம்பளம்)	130	68	222	-	-	-
நியதிக் கொடுப்பனவுகள் (ஊ.சே.நி/ ஊ.ந.நி/ பணிக்கொடைகள்)	134	90	-	-	-	-
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள்						
தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்காக	-	-	-	-	14	-
மொத்த வரவு (ரூ.மி)	264	158	222	-	14	-

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு, செலவு மதிப்பீடு மற்றும் 2021 ஆம் ஆண்டின் கணக்கறிக்கைக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 17 – 2020 - 2021 வருடங்களுக்கான ஒப்பீட்டு ரீதியான நிதிச் செயலாற்றுகை

விபரம்	2021 மதிப்பீடு	வருடாந்தக் கணக்கு - 2021	செயலாற்றுகை %	2020 மதிப்பீடு	வருடாந்தக் கணக்கு - 2020	செயலாற்றுகை %
உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை - உற்பத்திச் செலவு (C.O.P.)	432.60	562.56	130.04	490.68	492.88	100.45
- தேறிய விற்பனை சராசரி (N.S.A	445.04	464.45	104.36	452.48	432.14	95.51
இறப்பர் - உற்பத்திச் செலவு (C.O.P.)	239.50	688.13	287.32	312.85	428.06	136.83
- தேறிய விற்பனை சராசரி (N.S.A	300.00	410.80	136.93	300.00	277.73	92.58
மதிப்பிடப்பட்ட உற்பத்தி - தேயிலை (கி.கி)	2,250,940	1,803,223	80.11	1,980,891	1,728,728	87.27
மதிப்பிடப்பட்ட உற்பத்தி - இறப்பர் (கி.கி)	43,500	19,063	43.82	43,500	29,660	68.18
வருமானம்	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**
உற்பத்தி செய்த தேயிலை மற்றும் தேயிலைக் கொழுந்து	1,001,747,364	837,510,629	83.60	896,312,171	758,598,254	84.64
இறப்பர் - ஒட்டுப்பால்	13,050,000	7,831,089	60.01	13,050,000	8,237,326	63.12
மொத்த வருமானம்	**1,014,797,364**	**845,341,718**	**83.30**	**909,362,170.68**	**766,835,579.56**	**84.33**
கழி : உற்பத்திச் செலவு						
உற்பத்தி செய்த தேயிலை மற்றும் தேயிலைக் கொழுந்து	973,747,394	1,014,421,407	104.18	971,988,808	852,056,592	87.66
இறப்பர்	10,418,299	13,117,781	125.91	13,608,793	12,696,168	93.29
மொத்த உற்பத்திச் செலவு	**984,165,693**	**1,027,539,188**	**104.41**	**985,597,601**	**864,752,760**	**87.74**
தேறிய இலாபம்/(நட்டம்) - தோட்டம்	**30,631,671**	**(182,197,470)**	**(594.80)**	**(76,235,430)**	**(97,917,181)**	**128.44**
கூட்டு : ஏனைய வருமானங்கள்						
ஏனைய வருமானங்கள் - தோட்டம்	558,984,506	159,982,251	28.62	447,155,724	108,706,579	24.31
ஏனைய வருமானங்கள் - தலைமைக் காரியாலயம்	90,415,963	36,595,417	40.47	59,930,000	49,771,702	83.05
மொத்த ஏனைய வருமானங்கள் - தோட்டம் மற்றும் தலைமைக் காரியாலயம்	**649,400,469**	**196,577,668**	**30.27**	**507,085,724**	**158,478,281**	**31.25**
மொத்த வருமானம்	**680,032,140**	**14,380,198**	**2.11**	**430,850,294**	**60,561,100**	**14.06**
கழி - செலவுகள்						
நிர்வாகச் செலவுகள் - தோட்டம்	91,764,130	94,248,387	102.71	88,602,646	81,860,486	92.39
-தலைமைக் காரியாலய	47,685,023	58,132,610	121.91	38,905,198	40,726,247	104.68
தனிநபர் செலவுகள் - தலைமைக் காரியாலயம்	57,230,921	52,489,375	91.72	60,421,500	58,338,254	96.55
நிதிக் கட்டணங்கள் - தோட்டம்	8,113,140	6,458,818	79.61	7,949,744	5,597,184	70.41
-தலைமைக் காரியாலயம்	29,743,333	34,248,604	115.15	23,220,000	23,666,011	101.92
மொத்தச் செலவுகள்	**234,536,547**	**245,577,794**	**104.71**	**219,099,087**	**210,188,182**	**95.93**
இலாபம்/(நட்டம்) - தோட்டம் மற்றும் தலைமைக் காரியாலயம்	**445,495,593**	**(231,197,596)**	**(51.90)**	**211,751,207**	**(149,627,081)**	**(70.66)**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கடந்த 05 வருடங்களின் இலாபம்/ நட்டம்

அட்டவணை 18 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கடந்த 05 வருடங்களின் இலாபம்/ நட்டம்.

ஆண்டு	இலாபம்/ நட்டம்
2016	(150,916,820)
2017	(94,932,600)
2018	(147,798,507)
2019	(329,884,391)
2020	(149,627,081)
2021	(231,197,596)



உரு 13 – கடந்த 5 வருடங்களின் அடிப்படையில் இலாபம் மற்றும் நட்டத்தை ஒப்பீடு செய்தல்

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மனித வளங்கள்

2021 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை மற்றும் உற்பத்திப் பணியாளர்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 19 – அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மனித வளங்கள்

தோட்டம்	தோட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை	உதவித் தோட்ட அதிகாரிகளின் எண்.	ஆளணி		தொழிலாளர்கள்		மொத்தம்
			நிரந்தரம்	ஒப்பந்தம்	நிரந்தரம்	அமைய	
அலகொல்லை	1	2	13	-	264	0	264
கொடகங்கை	1	1	13	-	197	0	197
கல்பிஹில்லை	1	2	19	-	182	8	190
கோமரை	1	2	17	2	246	4	250
பாகலை	1	1	11	.	157	0	157
ஹெயார்பார்க்	1	1	11	1	137	3	140
ஹுன்னஸ்கிரிய	1	2	16	-	191	19	210
கெலேபொக்கை	1	4	34	2	730	58	788
மிட்லண்ட்	1	2	24	1	305	13	318
நிகோலோய	1	-	6	-	70	0	70
ஓபல்கலை	1	2	10	1	67	0	67
ரங்களை	1	1	22	1	195	55	250
வலஹந்துவை	1	-	3	1	35	17	52
வைதலாவை	1	-	3	-	57	39	96
வுட்சய்ட	1	-	2	1	30	0	30
விஹபரகலை					39	2	41
பிரதான காரியாலய் மற்றும் பிராந்திய	-	-	58	2	3	-	63
மொத்தம்	**15**	**20**	**262**	**12**	**2905**	**218**	**3183**

2020 ஆம் ஆண்டு முடிவடையும் போது தலைமை மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ஆளணி எண்ணிக்கை 63 ஆக இருந்ததோடு, 2021 இலும் அதே தொகையினரே காணப்பட்டனர். 2020 இல் இவ் ஆளணிக்கு சம்பளம் வழங்கவென ரூபா. 48.1 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் 2021 இல் ரூபா. 43.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா. 5.1 மில்லியன் அதாவது 10.52% இனால் குறைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு முடிவடையும் போது தோட்ட அதிகாரிகள் மற்றும் உதவித் தோட்ட அதிகாரிகள் உள்ளடங்களாக மொத்த ஆளணி மற்றும் வெளிக்கள ஆளணியினரின் எண்ணிக்கை 249 ஆக இருந்ததுடன், 2021 இல் அது 297 ஆக அதிகரித்துள்ளது. 2020 இல் இவ் ஆளணியினருக்கு சம்பளம் வழங்குவதற்காக ரூபா. 114.72 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் 2021 இல் ரூபா. 121.32 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டம்.

மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தினுள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 12 நடாத்தப்பட்டுள்ளதோடு 03 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 19 – பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

இல.	கூட்டத்தின் பெயர்	கூட்டத் திகதி	கூட்ட இல.
1	பணிப்பாளர்சபைக் கூட்டம்	2021.01.27	11
		2021.02.25	12
		2021.03.26	132
		2021.04.29	14
		2021.05.31	15
		2021.06.30	16
		2021.07.27	17
		2021.08.26	18
		2021.09.27	19
		2021.10.26	20
		2021.11.30	21
		2021.12.29	22
2	கணக்காய்வுக் குழுக் கூட்டம்	2021.03.30	1
		2021.09.09	2
		2021.12.23	3

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்குக்கும் அரச கணக்காய்வாளர் அதிபதி பாதகமான கருத்தையே முன்வைத்துள்ளார். இக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கு நீண்டகாலமாக பாதகமான கருத்தே இருந்துள்ளது. அதனை இவ் வருடமும் சரிப்படுத்த முடியவில்லை.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

நிதியியல் நிலைமைக் கூற்று

இலங்கை ரூபாவில்			
டிசம்பர் 31 இலுள்ளவாறு	**குறிப்பு**	**2021**	**2020**
சொத்துக்கள்			
நடைமுறை அல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	8	957,032,724	756,246,749
உயிரியல் சொத்துக்கள்	9	3,356,355,765	3,507,753,636
முதலீட்டு ஆதனம்	10	1,611,520,641	1,611,520,641
நிலையான வைப்புக்கள்		9,425,987	9,175,806
தொழிற்படு நிலையிலுள்ள மூலதன வேலை	26	438,730	781,064
பிற்போடப்பட்ட சொத்துக்கள்		**5,934,773,847**	**5,885,477,895**
மொத்தம் - நடைமுறை அல்லா சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	11	63,861,196	74,595,535
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை	12	248,384,533	184,025,544
ஏனைய வைப்புக்கள்	13		
காசும் காசுக்கு சமமானவையும்	13	41,794,882	45,886,973
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**354,040,611**	**304,508,052**
மொத்தச் சொத்துக்கள்		**6,288,814,458**	**6,189,985,947**
பங்குரிமை மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
பங்களிப்பு மூலதனம்	14	5,893,852,850	5,879,852,850
பிடித்து வைத்த வருவாய்கள்		(2,127,008,077)	(1,725,362,785)
மொத்தப் பங்குரிமை		**3,766,844,772**	**4,154,490,065**
நடைமுறை அல்லா பொறுப்புக்கள்			
ஊழியர் நலன் கடப்பாடுகள்	15	610,141,017	469,291,620
மொத்த நடைமுறை அல்லா பொறுப்புக்கள்		**610,141,017**	**469,291,620**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வர்த்தகம் மற்றும் செலுத்தல்கள்	16	1,640,065,683	1,363,998,504
வங்கிக் கடன்	16.1	100,000,000	100,000,000
வங்கி மேலதிகபற்று		171,762,986	102,205,759
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**1,911,828,669**	**1,566,204,263**
மொத்தப் பொறுப்புக்கள்		**2,521,969,686**	**2,035,495,883**
மொத்தப் பங்குரிமை மற்றும் பொறுப்புக்கள்		**6,288,814,458**	**6,189,985,947**

5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் நிதிக்கூற்றின் முக்கிய பகுதிகளாகும்.

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கேற்ப இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

திரு. எஸ்.ஐ.எம் ஹுஸைன்
பிரதிப் பொது முகாமையாளர் - நிதி

இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்புக்கு பணிப்பாளர்கள் சபையே பொறுப்பு. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை சார்பாக கீழே பெயர் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் அங்கீகரித்து ஒப்பமிட்டனர்.

திரு. ஸ்ரீமால் விஜேசேகர	**திரு. வை. கே வகொடபொல**	**திரு. டப்.டப்.எம்.பீ.பீ கம்புரதெனிய**
தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி	சபை அங்கத்தவர்	சபை அங்கத்தவர்

ஜூன் 28, 2022 கொழும்பு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

வருமானக் கூற்று

இலங்கை ரூபாவில்			
டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	**குறிப்பு**	**2021**	**2020**
வருமானம்	17	**845,341,718**	**766,835,580**
விற்பனைக் கிரயம்		(1,027,539,188)	(864,752,760)
மொத்த இலாபம் / (நட்டம்)		**(182,197,471)**	**(97,917,181)**
ஏனைய வருமானம்	18	194,790,022	156,276,640
நிர்வாகச் செலவினங்கள்	19	(204,870,371)	(180,887,340)
தொழிற்படு இலாபம் / (நட்டம்)		**(192,277,820)**	**(122,527,882)**
நிதி வருமானம்	18	1,787,646	2,201,642
நிதிச் செலவினங்கள்	19	(40,707,422)	(29,300,841)
வருடத்துக்கான இலாபம் / (நட்டம்)		**(231,197,596)**	**(149,627,081)**

5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

உரிமை மூலதன மாற்றற்கூற்று

இலங்கை ரூபாவில்.

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கானது

	மூலதனம்	காணி பகிர்ந்தளிப்பு	திரட்டிய இலாபம்/ நட்டம்	மொத்தம்
	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	3,659,250,925	2,220,601,926	(1,570,849,043)	4,309,003,808
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற கொடைகள்	-	-	-	-
வருடத்துக்கான நட்டம்	-	-	(149,627,081)	(149,627,081)
முந்திய ஆண்டின் சீராக்கல்கள் (குறிப்பு 25)	-	-	(4,886,661)	(4,886,661)
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**3,659,250,925**	**2,220,601,926**	**(1,725,362,785)**	**4,154,490,066**
2021 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	3,659,250,925	2,220,601,926	(1,725,362,785)	4,154,490,066
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற கொடைகள்	14,000,000	-	-	14,000,000
வருடத்துக்கான நட்டம்	-	-	(231,197,596)	(231,197,596)
முந்திய ஆண்டின் சீராக்கல்கள் (குறிப்பு 25)	-	-	(170,447,696)	(170,447,696)
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**3,673,250,925**	**2,220,601,926**	**(2,127,008,077)**	**3,766,844,772**

5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் நிதிக்கூற்றின் முக்கிய பகுதிகளாகும்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்			
காசுப் பாய்ச்சற் கூற்று			
இலங்கை ரூபாவில்			
டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கானது	குறிப்பு	2021	2020
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
வரியிடலுக்கு முந்திய தேறிய இலாபம் / (நட்டம்)		(231,197,596)	(149,627,081)
சீராக்கல்கள்			
உயிரியல் சொத்துக்களின் தேய்மானம்	8.1	3,035,076	4,019,863
சொத்துக்களின் தேய்மானம்	8	9,428,089	8,667,581
பிற்போடப்பட்ட சொத்துக்களுக்கான பதிவழிப்பு		39,128	-
நிதிச் செலவினங்கள்	20	40,707,422	27,989,617
நிதி வருமானம்	18	(1,787,646)	(2,201,642)
பணிக்கொடை ஏற்பாடு	15	37,508,004	30,226,545
கணக்காய்வுக் கட்டண ஏற்பாடுகள்		547,019	-
காப்புறுதி ஏற்பாடுகள்		954,089	-
அரச கொடைகள் மற்றும் மானியம்	18	(1,575,000)	-
முந்திய ஆண்டின் சீராக்கல்கள்		(175,084,833)	(4,886,661)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான இலாபம்		(317,426,248)	(85,811,778)
தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்			
இருப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		10,734,339	(12,092,894)
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறை		(64,358,989)	(8,815,799)
ஏனைய வைப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		-	-
நடைமுறைப் பொறுப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		392,131,886	72,413,700
தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு		338,507,236	51,505,007
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(15,461,867)	(7,145,102)
செலுத்தப்பட்ட நிதிக்கிரயம்	20	(39,107,422)	(26,389,617)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு		(33,488,302)	(67,841,489)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்			
நிதி வருமானம்	18	1,787,646	2,201,642
அரச கொடைகள் மற்றும் மானியம்	18	1,575,000	-
திறைசேரி கொடைகள் பெற்றுக்கொண்டவை		14,000,000	-
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான சேர்ப்பனவுகள்	8	(51,141,051)	(12,522,619)
உயிரியல் சொத்துக்களுக்கான சேர்ப்பனவுகள்	9.2	(6,132,431)	(27,989,617)
வங்கிக் கடன் - மக்கள் வங்கி		-	100,000,000
நிலையான வைப்புக்களில் முதலீடு		(250,181)	(312,007)
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(40,161,017)	61,377,398
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் அதிகரிப்பு / (குறைவு)		(73,649,318)	(6,464,091)
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் நகர்வு			
வருடத்தின் தொடக்கத்தில்	13	(56,318,786)	(49,854,694)
வருடத்துக்கான (அதிகரிப்பு) / குறைவு		(73,649,318)	(6,464,091)
வருடத்தின் முடிவில் காசு மற்றும் காசுக்கு சமமானவையும்	13	(129,968,104)	(56,318,786)
வருடத்தின் முடிவில் காசு மற்றும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு 13)			
கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு			
தலைமை அலுவலகம்		40,829,610	43,342,178
தோட்டங்கள்		965,273	2,544,796
வங்கி மேலதிகப் பற்று		(171,762,986)	(102,205,759)
		(129,968,104)	(56,318,786)

1. கூட்டுத்தாபனத்தின் தகவல்கள்

பொது

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்), 1958 **ஆம் ஆண்டின்** 4 **ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கையில் அமையப்பெற்றுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். அது இல**.21, **மீராணிய வீதி, கொழும்பு-**12 **இல் அமைந்துள்ள அரசாங்க கூட்டுத்தாபனமாகும்.**

கூட்டுத்தபானம் டிசம்பர் 31 **ஆந் திகதி முடிவடைகின்ற** 12 **மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் குறித்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படும்.**

பிரதான நடவடிக்கைகள்

தேயிலை உற்பத்தி, ஏலத்தினூடாக தேயிலையை சந்தைப்படுத்துதல், இறப்பர் பால் மற்றும் சிறிய அல்லது ஏற்றுமதிப் பயிர்களை (கராம்பு, மிளகு ஏலக்காய், கறுவா போன்றன) விற்பனைசெய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வர்த்தக நோக்கிலான மரங்களை நடுதலும் விற்பனை செய்தலும்.

2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படைகள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிட்டுள்ள 2020 ஆம் ஆண்டின் இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ள இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சீர்மதிப்பு பெறுமதியில் இருக்கின்ற உயிரியல் சொத்துக்களை விட வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

3. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

3.1.1 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏதேனும் இருப்பின் அவை திரண்ட பெறுமானத் தேய்வின் தேறிய கிரயம் மற்றும் திரண்ட மதிப்புக்குன்றுதல் இழப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய கிரயமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பகுதியை மாற்றீடு செய்யும் கிரயத்தையும் அங்கீகார தகுதிவிதிகளை பூர்த்திசெய்வதாயின் நீண்டகால கட்டுமான செயற்றிட்டங்களுக்கான படுகடன் செலவுகளையும் உள்ளடக்குகின்றது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின்

பாகங்களை காலத்துக்காலம் மாற்றீடுசெய்ய வேண்டிய தேவையேற்படின் கூட்டுத்தாபனம் மாற்றீடு செய்யப்பட்ட பாகங்களை அங்கீகரிப்பதில்லை என்பதுடன் புதிய பாகத்தை அதன் பயனுள்ள இருப்புக்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் அங்கீகரிக்கும். அவ்வாறே, அங்கீகரித்தல் தகுதிவிதிகள் திருப்திகரமானவையாக இருந்தால் பாரியளவிலான பரிசோதனையின் போது அதன் கிரயங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மாற்றீடு செய்தல் தொகையாக அங்கீகரிக்கப்படும். ஏனைய அனைத்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகள் உறப்பட்ட செலவுகள் என வருமானக்கூற்றில் தெரிவிக்கப்படும்.

3.1.3 பெறுமானத்தேய்விடல்

வருடத்தில் கொள்வனவுசெய்து அகற்றப்பட்ட ஆதனம், பொறிதொகுதி மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து அகற்றப்பட்ட திகதி வரை மேற்கொள்ளப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள இருப்பு காலங்கள் கீழ்வருமாறு:

விடயம்	பயன்மிகு இருப்புக் காலம்	சதவீதம்
கட்டிடம்	20 வருடங்கள்	5%
மோட்டார் வாகனம்	4 வருடங்கள்	25%
தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	8 வருடங்கள்	12.5%
அலுவலக உபகரணங்கள்	8 வருடங்கள்	12.5%
இயந்திரம்	8 வருடங்கள்	12.5%
கணிணி மற்றும் அச்சு உபகரணங்கள்	3 வருடங்கள்	33.33%

3.1.4 உயிரியல் சொத்துக்கள்

உயிரியில் சொத்துக்கள் உயிர் வாழ்கின்ற ஒரு மிருகம் மற்றும் தாவரத்துடன் தொடர்புபடுகின்றது. இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் உறுப்புரை 41 க்கேற்ப உயிரியில் சொத்துக்களுக்கு ஒரு சில சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. அவையாவன: (அ) மாறுவதற்கான செயல்வல்லுமை. (உயிரியல் நிலைமாற்றத்துக்கான செயல்வல்லுமை) (ஆ) மாற்றத்தை நிர்வகித்தல் (முகாமையானது இடம்பெற வேண்டிய செயன்முறைக்கு தேவையான நிலைகளை மேம்படுத்துவதன் மூலம் உயிரியல் நிலைமாற்றத்தினை வசதிப்படுத்தும். அத்தகைய முகாமையானது விவசாய நடவடிக்கையை ஏனைய நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுத்திக்காட்டும். உதாரணமாக: நிர்வகிக்கப்படாத மூலங்களிலிருந்து அறுவடை செய்தல்.) மற்றும் (இ) மாற்றத்தினை அளவிடுதல் (உயிரியல் நிலைமாற்றத்தினால் அல்லது அறுவடையினால் நிகழும் மாற்றும் அளவிடப்படுவதுடன் வழமையான முகாமை தொழிற்பாடாக கண்காணிக்கப்படும்).

உயிரியல் சொத்துக்கள் இரண்டு வகைப்படும். அவையாவன: தாங்கி உயிரியல் சொத்துக்கள் (bearer biological assets) மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் (consumable biological assets) என இரு வகைப்படும்.

3.1.4.1 தாங்கி உயிரியல் சொத்துக்கள் (Bearer Biological Assets)

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் தவிர்ந்தவை தாங்கி உயிரியல் சொத்துக்களாகும். அவை கூட்டுத்தாபனத்திற்குரிய தேயிலை புதர்கள், இறப்பர் மரங்கள் போன்ற பாரியளவிலான பெருந்தோட்டங்களையும் ஏதாவது நிலப் பயிர்களையும் உள்ளடக்கும். இவற்றுக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தெரிவுக்கேற்ப கிரயத்திலிருந்து ஏதாவது திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதாவது திரண்ட மதிப்புக்குன்றுதல் இழப்புக்களை கழித்து பெறுமான தேய்விடப்படும்.

தாங்கி உயிரியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள இருப்பு காலம் வருமாறு:

தென்னை	25 வருடங்கள்	கொகோ	20 வருடங்கள்
மிளகு	15 வருடங்கள்	கருவா	25 வருடங்கள்
இறப்பர்	35 வருடங்கள்	சாதிக்காய்	30 வருடங்கள்
கராம்பு	50 வருடங்கள்	மீள் பயிரிடல்	25 வருடங்கள்
கோப்பி	25 வருடங்கள்	இஞ்சி	01 வருடம்
பாக்கு	40 வருடங்கள்	தேயிலை	100 வருடங்கள்

3.1.4.2 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்

விவசாய உற்பத்தியாக அறுவடை செய்யத்தக்க அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்பனை செய்யக்கூடிய சொத்துக்கள் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களாகக் கருதப்பதுடன், அதற்கு வெட்டுமரமும் உள்ளடங்கும். விவசாய உற்பத்திகளை சந்தைக்குச் சந்தை எடுத்துச்செல்வதற்கான கிரயத்தையும் மதிப்பிடப்பட்ட விற்பனை கிரயத்தையும் கழித்து கிடைக்கும் சராசரிப் பெறுமதிக்கு இவ் உற்பத்தி மதிப்பிடப்படுகின்றது. விலை மதிப்பிடல் மீதான இலாபம் அல்லது நட்டம் விபரமான வருமான கூற்றின் கீழ் காட்டப்படும்.

3.1.4.3 பிற்போடப்பட்ட சொத்துக்கள்

பிற்போடப்பட்ட சொத்துக்கள் வருடத்துக்கு 10% கடன் பதிவழிக்கப்படுகின்றன.

3.1.5 முதலீட்டு ஆதனம்

மூலதன மதிப்பேற்றத்துக்கும் மேலும்/ அல்லது வாடகை வருமானத்தினை உழைப்பதற்கும் வைத்திருக்கின்ற ஆதனங்களை முதலீட்டு ஆதனம் உள்ளடக்குகின்றது. அவை ஆரம்பமாக தொடர்புடைய வணிகவினை கிரயங்கள், மேலும் சேர்த்தல், ஒரு பாகத்தை மாற்றீடு செய்தல் அல்லது ஆதனத்தை பழுதுபார்த்தலினால் உறப்பட்ட செலவுகள் உள்ளடங்கலான கிரயத்திலேயே அளவிடப்படுகின்றன. அடுத்துறு அளவீடானது திரண்ட பெறுமானத் தேய்வினை கழித்து பெறும் கிரயத்திலேயே இருக்கும்.

3.1.6 நடைபெற்றுகொண்டிருக்கின்ற மூலதன வேலை (Capital work in progress)

ஐந்தொகை திகதியில் மூலதனமாக்கப்படாத வருடத்தில் உறப்பட்ட செலவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மூலதனச் செலவுகள் என காண்பிக்கப்படும். அதே

நேரத்தில், வருடத்தில் மூலதனமாக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ள மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் இயந்திரத்துக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

3.1.7 குத்தகை வசதிகள்

ஏதாவதொரு வசதி குத்தகையாக இருக்குமா அல்லது அது குத்தகை வசதியை உள்ளடக்கி இருக்குமா என்பது தொடர்பான தீர்மானமானது குறித்த வசதியின் கருப்பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், அவ் வசதிகளை ஏற்பாடு செய்துகொடுப்பதானது குறித்த சொத்து அல்லது சொத்துக்களின் பயன்பாட்டின் அடிப்படையிலும், அதன் மூலம் குறித்த சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை வழங்கப்படுமா என்பதிலும் தங்கியுள்ளது.

நிதிக் குத்தகை வசதிகள்

சொத்துக்களின் உடைமைக்கு நேரிடக்கூடிய, என்றாலும் சட்டரீதியான கோரிக்கைகள் அவசியமற்ற அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவில் எதிர்த்தரப்புக்களுக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடிய உடன்படிக்கைகள் நிதி குத்தகைகளாக கருதப்படுகின்றன. கூட்டுறவுத்தாபனம் நிதி குத்தகைகளின் கீழ் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதுடன் அவை "ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண"த்தின் கீழ் உள்ளடக்கப்படுவதுடன் குத்தகை வழங்குநருக்கான ஏற்புடைப் பொறுப்பு "குத்தகை கடன்கொடுநரின்" கீழ் உள்ளடக்கப்படும். ஒரு நிதி குத்தகையும் அதனை நேரொத்திருக்கும் பொறுப்பும் ஆரம்பமாக சொத்தின் நியாயமான பெறுமதியிலோ அல்லது குறைவாயின் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலோ அங்கீகரிக்கப்படும். குத்தகையில் உள்ளடக்கும் வட்டி வீதத்தின் அடிப்படையில் குத்தகை காலம் முழுவதிலும் செலுத்தவேண்டிய நிதி கட்டணங்கள் "தேறிய வட்டி வருமானத்தில்" அங்கீகரிக்கப்படுவதனால் பொறுப்பின் எஞ்சியுள்ள மீதி தொடர்பாக மாறா வட்டி வீதத்தினை பேண முடியும்.

தொழிற்படு குத்தகைகள்

ஏனைய அனைத்து குத்தகைகளும் தொழிற்படு குத்தகைகளென வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுத்தாபனம் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகை சொத்துக்கள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படமாட்டாது. தொழிற்படு குத்தகைகளின் கீழ் செலுத்த வேண்டிய மற்றும் கிடைக்க வேண்டிய வாடகைகள் குத்தகைகள் காலங்கள் முழுவதிலும் நேர்கோட்டு முறை அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் அவை முறையே "நிர்வாக செலவுகள்" மற்றும் "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

3.2.1 பொருள் விவரப் பட்டியல்கள்

"முதல் வந்து முதல் செல்லுதல்" **(First in first out)** அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்குரிய உதவித் தொகையை வழங்கியதன் பின்னர் கிரயம் மற்றும் தேறிய காசாக்கத்தகு பெறுமதியில் எது குறைந்ததோ அதன்படி பொருள் விவரப் பட்டியல்கள் அங்கீகரிக்கப்படும்.

இருப்புக்களைக் கணக்கிடுதல்

3.2.2 இருப்புக்களின் கிரயம்

மூலப்பொருட்கள்

ஏதாவது நேரிடக்கூடிய செலவுடனான கொள்வனவுகளின் செலவு.

தற்போது நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

முடிவுப் பொருட்கள்

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

3.2.3 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவை கையிலும் வங்கியிலுமுள்ள காசு, நிலையான வைப்பு முதலீடுகள், ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறைவான அசல் முதிர்ச்சிகளுடனான குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிக பற்றுக்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் படுகடன்களினுள் காட்டப்பட்டுள்ளன.

3.2.4 ஆராய்ச்சிச் செலவுகள்

நவீன விஞ்ஞானபூர்வமான அல்லது தொழிநுட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான செலவினம் அது ஏற்படும் போது இலாபத்தில் அல்லது இழப்பில் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

4.1 *இளைப்பாறல் நலன் கடப்பாடுகள்*

4.1.1 *கட்டாய நலன் திட்டம் – ஓய்வூதியப் பணிக்கொடை*

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் குறிப்பீட்டு நியதிகளுக்கேற்ப இளைப்பாறல் பணிக்கொடையை செலுத்துவது கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். ஒரு உத்தியோகத்தர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்தேர்ச்சியான ஐந்து வருட கால சேவையை பூரணப்படுத்தினால் மாத்திரமே அவர் சார்பாக பணிக்கொடை செலுத்த வேண்டிய தேவையேற்படுகின்றது. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக ஐந்தொகையில் ஒரு ஒதுக்கீடு முன்கொணரப்படும். ஒரு வருடத்தின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் வருடத்தின் இறுதியில் முன் கொண்டுசெல்லப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் இடையிலான வேறுபாடு வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

இப்பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. குறித்த விடயம் ஐந்தொகையில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

4.1.2 *கட்டாயப் பகிர்ந்தளிப்புத் திட்டங்கள் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்.*

கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் பங்களிப்பு நிதி வழங்கப்படும். குறித்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிக்கேற்ப உரிய பகிர்ந்தளிப்பு நிதியங்களால் இப் பகிர்ந்தளிப்பு நிதி ஈடுசெய்யப்படும். ஊழியர்களின் நலன்கருதி திட்டங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கான கடமைப்பொறுப்புக்கள் வருமான கூற்றில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படும்.

ஊழியர் சேமலாப நிதியம்,

கூட்டுத்தாபனமும் ஊழியர்களும் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் முறையே 12**%** மற்றும் 10**%** இனை பங்களிப்புச் செய்கின்றனர்.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

கூட்டுத்தாபனம் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு அடிப்படை சம்பளத்தின் 3% த்தினை பங்களிப்புச் செய்கின்றது.

5. வருமானக் கூற்று

வருமானக்கூற்றினை முன்வைக்கும் நோக்கத்துக்காக செலவுகள் முறையின் தொழிற்பாடு இணைத்துக்கொள்ளப்படும். ஏனெனில், அது கூட்டுத்தாபன செயலாற்றுகையின் உருப்படிகளை உறுதியாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

5.1.1 *வருமானங்களை இனங்காணல்*

கூட்டுத்தாபனத்துக்கு பொருளாதார நலன்கள் கிடைக்கக்கூடிய அளவில் வருமானம் இனங்காணப்படுவதுடன், கொடுப்பனவு எப்போது செலுத்தப்பட்டது என்பதை கருத்திற்கொள்ளாது வருமானத்தை நம்பகமான முறையில் அளவிட முடியும். ஒப்பந்தத்தினால் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளை கருத்திற்கொண்டு பெற்றுக்கொண்ட அல்லது பெறத்தக்க தொகையின் சீர்மதிப்பு பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

வருமானத்தை ஏற்றுக்கொள்ள முன்பு கீழுள்ள குறிப்பான இனங்காணல் தகுதிவிதிகள் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

பொருட்களின் விற்பனை

பொருட்களின் உடைமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் வழமையாக பொருட்களை விநியோகிக்கும் போது வாங்குபவருக்கு சேர்ப்பிக்கப்பட்டதும் பொருட்களின் விற்பனையினாலான வருமானம் இனங்காணப்படும்.

சேவைகளை வழங்குதல்

கணக்கீட்டு காலத்தின் போது சேவைகள் வழங்கப்பட்டதும் அல்லது நிறைவேற்றப்பட்டதும் சேவை வழங்கலுக்கான வருமானம் இனங்காணப்படும்.

ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானம் இயல்பாக சேரக்கூடியவை அடிப்படையில் இனங்காணப்படும். இது பிரதானமாக வருமானத்தை முகாமைத்துவம் செய்தல், பதிவுக் கட்டணம், வெட்டுமர விலைமனுகோரல் செயன்முறைகள் மற்றும் குத்தகை வாடகை வருமானம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

5.1.2 *செலவினங்கள்*

ஒரு வியாபாரத்தினை நடத்துகையில் உறப்பட்ட அனைத்து செலவுகளும் குறித்த வருடத்துக்கான இலாபத்திற்கு உரித்தாகும் வருமானத்தினுள் உள்ளடக்கப்படும். திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் உறப்பட்ட வருடத்தின் இலாப நட்டத்தில் உள்ளடக்கப்படும்.

5.1.3 *நிதிச் செலவினங்கள்*

ஒரு சொத்தின் கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடைய படுகடன் கிரயங்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனெனில், அத்தகைய சொத்தின் பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு குறிப்பிட்டதொரு காலம் செல்லும். ஏனைய அனைத்து படுகடன் கிரயங்கள் அவை நிகழந்த காலத்திலேயே செலவு வைக்கப்படும். கூட்டுறவுத்தாபனத்தின் நிதிச் செலவினங்கள் மேலதிகப்பற்று வட்டி, காசு தரகு, கடன் வட்டி (வங்கி மற்றும் ஏனையவை) மற்றும் தரகர்களின் வட்டி என்பவற்றை உள்ளடக்கும்.

6. நிதியியல் கருவிகள் – ஆரம்பகட்ட இனங்காணலும் அடுத்துறு அளவீடும்.

6.1 நிதிச் சொத்துக்கள்

6.1.1 ஆரம்பகட்ட இனங்காணலும் அளவீடும்.

இலங்கைக் கணக்கீட்டு தரநியமங்களின் 39 ஆம் வரையெல்லையினுள் நிதியியல் சொத்துக்களாவன இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பவற்றினூடாக சீர்மதிப்பு பெறுமதியிலும், முதிர்ச்சி முதலீடுகளுக்கு வைத்திருப்பவை என்றும் நிதிச்சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை என்றும் பொருந்தும் விதத்திலும் ஆரம்ப இனங்காணலில் அச்சொத்தின் நிதியில் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிக்கக்கூடியவாறும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இல்லாத சந்தர்ப்பத்தில் அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பமாக சீர்மதிப்பு பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களுடன் சேர்த்து இனங்காணப்படும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியியல் சொத்துக்களுள் காசு மற்றும் குறுகிய கால நிலையான வைப்புக்கள், வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை, மற்றும் ஏனைய வைப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன. மேற்கூறப்பட்ட நிதிச்சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படும்.

6.1.2 அடுத்துறு அளவீடு

நிதிச்சொத்துக்கள் தொடர்பான அட்டுறு அளவீடு அவற்றின் வகைப்படுத்தலிலேயே தங்கியுள்ளன.

6.1.2.1 இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் சீர்மதிப்பு பெறுமதிக்கு நிதிச் சொத்துக்கள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடுகின்ற நிதிச்சொத்துக்களுள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற நிதிச்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதிச்சொத்துக்களாக ஆரம்ப அங்கீகாரத்தினை பெற்ற நிதிச்சொத்துக்களும் உள்ளடங்குகின்றன. நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கோ அல்லது மிகவும் கிட்டிய காலத்தில் மீள்கொள்முதல் நோக்கில் கையகப்படுத்தியிருந்தால் அச்சொத்துக்கள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும். 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடப்பட்ட நிதிச்சொத்துக்களேதும் இருக்கவில்லை.

6.1.2.2 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை என்பது, ஒரு செயல்படு சந்தையில் குறிப்பீடு செய்யப்படாத நிலையான மற்றும் மூலதனம் அல்லாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், இத்தகைய நிதிச்சொத்துக்கள் பயனுள்ள வட்டிவீத முறையை *(EIR)* பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் அளவிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமான கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில் நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும்.

6.1.2.3 முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள்

கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சிக்கு வைத்திருக்கும் சாதகமான எண்ணம் இருந்தால் நிலையான அல்லது நிச்சயிக்ககூடிய கொடுப்பனவுகளுடனான பெறுமதியற்ற நிதிச்சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிகள் முதிர்ச்சிக்காக வைத்திருப்பவை என வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவையானது பயனுள்ள வட்டி வீத முறையை பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் கணிப்பிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில்

நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும். 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவை ஏதும் இருக்கவில்லை.

.6.1.2.4 விற்பனைக்கு இருக்கும் நிதி முதலீடு

நிலையான சொத்துக்களின் பேரேட்டு மீதி மற்றும் நிலையான சொத்துக்களின் துணை ஏடுகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கு இடையில் வித்தியாசம் இருப்பது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களிலாகும்.

அது பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

சொத்து வகை	தோட்டங்கள்			தலைமை அலுவலகம்		
	பேரேட்டுக்கு ஏற்ப மீதி	துணை ஏட்டிற்கு ஏற்ப மீதி	வித்தியாசம்	பேரேட்டுக்கு ஏற்ப மீதி	துணை ஏட்டிற்கு ஏற்ப மீதி	வித்தியாசம்
கட்டிடங்கள்	184,104,453.00	148,266,753.00	35,837,700.00	4,959,427,.00	1,959,427.00	-
கணினி மற்றும் அச்சு இயந்தியரம்	970,022.00	952,522.00	17,500.00	5,018,552.00	5,018,552.00	-
உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள்	26,200,532.00	15,227,568.00	10,972,964.00	17,544,268.00	17,544,268.00	-
மோட்டார் வாகனம்	84,200,574.00	36,142,310.00	48,058,264.00	66,115,401.00	66,115,401.00	-
இயந்திரங்கள்	133,620,338.00	114,408,412.00	19,211,926.00	-	-	-

தோட்டங்களில் நிலையான சொத்துப் பதிவேடு உரிய முறையில் நிர்வகிக்கப்படாமையினால், இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கேற்ப, இவ்வித்தியாசங்கள் எவ்வளவு காலமாக இருந்து வருகின்றது என்றும் எந்த நோக்கங்களால் ஏற்பட்டுள்ளது என்றும் கண்டறிந்து தேவையான சரிப்படுத்தல்கள் சீராக்கல்கள் 2023 நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்படும் என்று அறியத்தருகிறோம்.

1.2.6 பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) *2020* இல் பெற்றுக்கொண்ட ரூபா. *100* மில்லியன் பெறுமதியான வங்கிக் கடனை *10* தவணைகளில் மீண்டும் செலுத்துவதற்கு வங்கியுடன் உடன்பட்டுள்ளதுடன், அந்த வகையில், முதலாவது தவணை *2023* ஜனவரி மாதத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வங்கி மேலதிகப் பற்றினை நிறுவனத்தின் நிதி நிலைமை சிறப்பாக இருக்கும் சந்தர்ப்பங்களில் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தர விரும்புகிறோம்.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் கீழே குறிப்பிட்டுள்ள அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியிருக்கும் கடன் நிலுவைகளை குறித்த நிறுவனங்கள், நிரல் அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியுடன் கதைத்து இந்தக் கடன்களை செலுத்துவதற்கோ அல்லது ஏடுகளிலிருந்து நீக்கிவிடவோ எதிர்பார்க்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட பெருந்தோட்டக் கம்பனி –	ரூபா. *38* மில்லியன்
வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் ஸேன்ட் கம்பனி –	ரூபா. *25* மில்லியன்
மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை –	ரூபா. *97*மில்லியன்

(இ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அனைத்து கடன்பட்டோர் மீதிகளில் இதுவரையில் ஐயக் கடன்களின் கீழ் ஒதுக்கப்படாத மீதிகளை *2022* நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது அவ்வாறு ஒதுக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம். அதே போன்று ஏனைய கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கோ அல்லது அறவிட முடியாத கடனின் கீழ் ஒதுக்குவதற்கு/ ஏடுகளிலிருந்து நீக்கிவிடுவதற்கு *2023* இல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஈ) அல்கடுவை பெருந்தோட்டத்திலிருந்து அறவிடத்தக்க ரூபா. *1,916,092.00* பெறுமதியான பணம் (அதாவது அறவிட வேண்டிய கடன் ரூபா. *1,500,000.00* மற்றும் கிடைக்கத்தக்க சம்பளம் ரூபா. *416,092.00*) தொடர்பாக குறித்த கம்பனி மற்றும் பெருந்தோட்டத் தொழிற்சாலை அமைச்சுடன்

கலந்துரையாடி அதனை ஏடுகளிலிருந்து நீக்கிவிடவோ அல்லது அவற்றை அறவிட்டுக்கொள்ளவோ 2023 ஆம் ஆண்டினுள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

உ) மர விற்பனை தொடர்பாக கிடைத்துள்ள ரூபா. 786,379.00 பெறுமதியான முற்பணம் 2013 ஆம் வருடத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ஒரு மீதியாக இருப்பதால், 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது அதனை மீண்டும் வருமானமாக பதிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(ஊ) தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு 2021.12.31 ஆந் திகதிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா. 29,345,773.00 ஆக இருந்ததுடன், நிறுவனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக இத்தொகையை உரியவாறு தீர்க்க முடியவில்லை என்பதை அறியத்தருகிறோம்.

1.27 கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை.

(அ) நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகயாக தோட்டங்களிலுள்ள வணிக ரீதியாக பெறுமதியிட முடியுமான அனைத்து மரங்களையும் இலக்கமிட்டு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தோட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், தற்போது 10 தோட்டங்களின் அறிக்கைகள் கிடைத்துள்ளன. எனவே, 2023 இல் இவ்வாறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியத்தருகிறோம்.

எனவே, கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து தோட்டங்களின் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை 2023 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றின் மூலம் காண்பிக்க முடியுமென அறியத்தருகிறோம்.

(ஆ) நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தாங்கி உயிரியல் சொத்துக்களை ஒவ்வொரு பயிர்கள் தொடர்பான வயதுப் பகுப்பாய்வினை 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் காட்டப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

(இ) 2. வுட்சய்ட், வைதலாவை, விஹாரகலை மற்றும் மிட்லன்ட் தோட்டங்களின் ஊழியர் பணிக்கொடை நிலுவையை காட்டும் அறிக்கை எவ்வாறு தயாரிசெய்யப்பட்டுள்ளது என்பது, PAL/C/SLSPC/21/AQ/07 ஆம் இலக்க மற்றும் 2023 ஜனவரி 12 ஆம் திகதிய கணக்காய்வு உசாவல்கள் தொடர்பான விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

(ஈ) பணிக்கொடை ஒதுக்கல் கணக்கில் சீராக்கல் செய்துள்ள ரூபா. 159,683,488.00 எனும் தொகை உருவாகியுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. 2021 இல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 33 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக வருட இறுதியில் பணிக்கொடை ஒதுக்கல் சீராக்கல் பெறுமதி உயர்ந்துள்ளது.

தலைமை அலுவலகத்தின் பணிக்கொடை ஒதுக்கல் 2021.12.31 ஆந் திகதிய ஊழியர்களின் சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிட்டிருப்பதால், தேவையான சீராக்கல்கள் 2021 டிசம்பர் மாதத்தில் செய்யப்பட்டுள்ளன.

தோட்டம்	தோட்டங்களின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட மாதம்.	வரவு ரூ. சத	பற்றுகள் ரூபா. சதம்)
அலகொல்ல	டிசம்பர் 2021	21,245,404.45	-
கொட்டகங்கை	டிசம்பர் 2021	11,777,743.34	-
கல்பிஹில்லை	டிசம்பர் 2021	10,749,716.73	-
கோமரை	டிசம்பர் 2021	15,169,288.71	-
பாகலை	டிசம்பர் 2021	10,347,150.42	-
ஹெயாபார்க்	டிசம்பர் 2021	16,926,000.00	3,805,883.50
ஹுன்னஸ்கிரியை	டிசம்பர் 2021	14,322,000.00	-
கெலேபொக்கை	டிசம்பர் 2021	48,869,872.75	-
ஓபல்கலை	டிசம்பர் 2021	5,377,500.44	-
ரங்களை	டிசம்பர் 2021	8,892,724.34	-
மிட்டலன்ட்	டிசம்பர் 2021	-	1,974,016.00
நிகோலோய	டிசம்பர் 2021	-	724,878.37
தலைமை காரியாலயம்	டிசம்பர் 2021	2,510,865.00	-
		166,188,266.18	6,504,777.87

தேறிய சீராக்கல் பெறுமதி - ரூபா. 159,683,488.31

(உ) *2021.12.31* ஆம் திகதிக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. *6,705,259.00* பெறுமதியான வேறு உரிமையளிக்கப்பட்ட சொத்துக்களின் மீதி *1997* க்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ஒரு மீதியாகும். மேலும், இந்த நிலுவை தொடர்பாக எத்தகைய ஆவணங்களும் எம்மிடம் இல்லை.
தோட்டங்களுக்கான நிலையான சொத்துக்களுக்கான ஏட்டினைத் தயார்செய்த பிறகு இவ்வாறு உரிமை மாற்றம் செய்த சொத்துக்களின் மீதியை இனங்காணக்கூடியதாக இருக்கும் என் அறிவிக்கிறோம்.

(ஊ) 5. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள், தொழிற்சாலைகள், இயந்திரங்கள் என்பவற்றை மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளை அளவிடும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தின் பாவனையிலுள்ள அனைத்து வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்கள், காப்புறுதிச் சான்றிதழ்கள் மற்றும் லொக் குறிப்புப் புத்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலுள்ளதாக அறியத்தருகிறோம். அந்த வாகனங்களுடன் தொடர்புடைய விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

வாகன இல.	பதிவுச் சான்றிதழ்	காப்புறுதிச் சான்றிதழ்	லொக் குறிப்புப் புத்தகம்
KY 4653 கார்	உண்டு	உண்டு	உண்டு
PB 8673 டபல் கெப்	உண்டு	உண்டு	உண்டு
43-1066 வேன்	உண்டு	உண்டு	உண்டு
LW 0203 ஜீப்	உண்டு	உண்டு	உண்டு
204-4233 முச்சக்கர வண்டி	உண்டு	உண்டு	உண்டு
KG 5690 கார்	உண்டு	உண்டு	உண்டு

மேற்கூறப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு. 02)

தோட்டங்களின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் கணிணிகளை மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(எ) எமது நிறுவனம் வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக, PAL/C/SLSPC/INFO/2021/04 ஆம் இலக்க உசாவலுக்கு பதிலளிப்பது தாமதமாகியது. என்றாலும், குறித்த உறுதிப்படுத்தல் அறிக்கையானது, PAL/C/SLSPC/2021/AQ/08 ஆம் இலக்க மற்றும் 2023 ஜனவரி 12 ஆம் திகதிய கணக்காய்வு உசாவலுடன் தொடர்புடைய விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 2021.12.31 ஆம் திகதிய கூட்டுத்தாபனத்தின் கையிருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா. 63,861,195.00 பெறுமதியான கையிருப்பு உருவாகியுள்ள விதத்தைக் காண்பிக்கும் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 03)

(ஏ) 2022 வருடத்திற்குரிய நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது காணிகளைக் குத்தகைக்கு விடுவதுடன் தொடர்புடைய கிடைக்கத்தக்க தொகையான ரூபா. 15,780,848.00 வினை ஐயக் கடன்களுக்கான ஒதுக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்படுமென அறியத்தருகிறோம். எஞ்சியுள்ள கடன்பட்டோர் மீதி தொடர்பான 2023 இல் கண்டறிந்து அதுதொடர்பான கணக்கு சீராக்கலை 2023 வருடத்திற்குரிய நிதிக் கூற்றினை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

தற்போது நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்குரிய கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக பிற்பட்ட காலத்தில் தீர்க்கப்பட்டமை பற்றிய விபரங்கள் 2022.12.23 ஆம் திகதி கடிதத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஐ) கீழே குறிப்பிடப்படுகின்ற கடன்கொடுநர் மீதிகள் தொடர்பில் 2021.12.31 ஆம் திகதி காணப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் பிரதிகள் PAL/C/SLSPC/2021/AQ/10 மற்றும் 2023 ஜனவரி 21 ஆந் திகதிய கணக்காய்வு உசாவலுடன் தொடர்புடைய விடைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உரக் கூட்டுத்தாபனம்	-	ரூ.35,931,679.00
சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி	-	ரூ..38,010,958.00
லங்கா கனிய மணல்	-	ரூ. 25,000,000.00
		ரூ.98,942,637.90
		==========

கீழே குறிப்பிடப்படுகின்ற காலங்கடந்த கடன்கொடுத்தோர் மீதியை 2022 வருடத்திற்குரிய நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது மீண்டும் வருமானமாக கணக்கில் வைக்கப்படும்.

பொலிகெமிக்ஸ்	-	ரூ. 715,388.50
கெடகஹவெல தேயிலைத் தொழிற்சாலை	-	ரூ. 337,883.00
வரையறுக்கப்பட்ட மவுன்ட் லீஸரி	-	ரூ. 200,000.00
வோட்டர்ஸ் பே தேயிலைத் தொழிற்சாலை	-	ரூ. 3,224,640.67

ரூ. 4,497,912.17
==========

தற்போது நிறுவனம் முகங்கொடுகின்ற நிதி நெருக்கடி காரணமாக ரூபா. 255,518,946,39 பெறுமதியான கடன்கொடுநர் பெறுமதிக்குள் உள்ளடங்கியுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களின் கடன்கொடுநர் மீதியை தீர்க்க முடியவில்லை. ஏனைய கடன்கொடுநர்கள் தொடர்பில் மேலும் விபரமாக பரிசீலனை செய்து அது தொடர்பில் 2023 இல் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(ஒ) 2010 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கு அமைவாக ஐயக்கடன் ஒதுக்கம் மற்றும் விஷேட இழப்பீடுகளுக்கான ஒதுக்கம் உருவாகியுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

i ஐயக்கடனின் கீழ் ஒதுக்கப்பட்டது

2006 க்கு முன்பிருந்தே இருந்துவரும் மீதி	-	ரூ. 1,591,349.00
ii விஷேட இழப்பீடுகளுக்காக ஒதுக்கப்பட்டது-		ரூ 47,537,070.00
		ரூ. 49,128,419.00

==========

மேற்கூறப்பட்ட ஈட்டுக்கடன் ஒதுக்கத்திற்கான பற்று மீதிகள்

நுகர்வாளர் கடன்பட்டோர் ஜனவசம்	-	ரூ. 41,071,407.00
வெவ்வேறு வருமானக் கடன்காரர்கள்	-	ரூ. 2,588,530.00
உற்பத்தியாளர்களுக்கான கடன்பட்டோர்	-	ரூ. 726,644.00
உற்பத்தித் திணைக்களத்தின் கடன்பட்டோர்	-	ரூ. 25,876.00
கிடைக்கத்தக்க கடன்பட்டோர் (ஜனவசம)	-	ரூ. 1,668,269.00
நானாவித கடன்படுநர்கள்	-	ரூ. 3,047,693.00
		ரூ. 49,128,419.00

==========

2010 நிதிக் கூற்றுக்கள் மற்றும் கடன்பட்டோர் துணை ஏடுகளின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு இல. 04)

2004 ஆம் வருடத்திற்கு முன்பிருந்தே கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் தோட்டம் மற்றும் தலைமை அலுவலகத்தின் கணக்கு என 02 பகுதிகள் கணக்கு பேணப்பட்டு வந்திருப்பதுடன், 2006 இல் இந்த இரண்டு கணக்குகளையும் ஒன்று சேர்த்து ஒரு கணக்காக தயாரிக்கும் போது இடம்பெற்ற வழு காரணமாக ரூபா. 1,933,044.00 பெறுமதியான ஒரு வித்தியாசம் ஏற்பட்டதுடன் அந்தப் பணம் செயலற்ற கணக்கு மீதி என முன்கொணரப்பட்டுள்ளது. இந்தப் பணம் 2022 ஆம் வருடத்திற்குரிய நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது ஏடுகளிலிருந்து நீக்கிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகிறேன்.

(ஓ) மீளளிக்கப்பட வேண்டிய விலைமனுக் கோரல் வைப்புக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா. 6,379,570.00 பெறுதியான தொகை 2006 இலிருந்து இருந்து வருவதுடன், 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது அத்தொகையை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகிறேன்.

(ஒள) வெட்டுமர விற்பனை மீதான கடன் பெறுமதியான ரூபா. 2,801,000.00, 2013 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகின்ற மீதி என்பதால், 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது மீண்டும் வருமானத்தின் கீழ் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகிறோம்.

(க) 2020 மாதத்தில் கூட்டுத்தாபத்தின் நிறைவேற்றுத் தரம் அல்லாத ஆளணியின் மருத்துவ உதவித் தொகையான ரூபா. 312,238.00 வினை கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கிக் கணக்கு இல. 046100240000933 இலிருந்து இலங்கை வங்கிக் கணக்கு இல. 2327539 க்கு மாற்றப்பட்டமை தொடர்பான குறிப்பில் தவறு நிகழ்ந்துள்ளதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

(ச) தோட்டங்களின் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள வியாபாரம் – கிடைக்கத்தக்கன என்பதில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றை எடுத்துக்கொள்வதற்கு தோட்டங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அவ்வாறு அனுப்பிய மற்றும் கிடைத்த கடிதங்களின் பிரதிகள் (அலகொல்லை, கல்பிஹில்லை, விஹாரகலை, ஹுன்னஸ்கிரியை, கொட்டகங்கை, ஹெயார்பார்க்) PAL/C/SLSPC/INFO/2021/05 சம்பந்தமான அறிக்கை 2022.12.23 ஆம் திகதி உங்கள் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ட) இந்தப் பணம் கல்பிஹில்ல தோட்டத்தினால் ஊழியர் சேமலாப நிதிய வழக்குகளுக்காக செலுத்தப்படுகின்ற தவணைகளுக்காக பேணப்படுகின்ற கணக்காக இருப்பதுடன், தவணைகள் செலுத்தி முடிக்கப்பட்ட பிறகு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிற்கு மாற்றப்படும்.

2.2.2 சட்ட விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) நிறுவனம் நீண்ட காலமாக எதிர்கொண்டிருக்கும் நிதி நெருக்கடியை அடுத்து, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் கட்டாயப் பகிர்ந்தளிப்புக்கள் என்பவற்றை செலுத்த இயலாமை காரணமாக இந்த மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவைத் தொகையைச் செலுத்த திறைசேரியிலிருந்து நிதி கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்ப்பதுடன், குறித்த நிதி கிடைத்தவுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் தீர்க்கப்படும் என்று தெரிவிக்கிறோம். 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நன்னம்பிக்கை நிதிய நிலுவைகள் முறையே ரூ. 539,974,518.00 மற்றும் ரூ. 34,586,229.00 ஆக இருந்தன. இந்நிலுவைகள் பற்றிய விரிவான தகவல்கள் கூட்டுத்தாபனத்துடன் இல்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அவர்களின் ஆலோசனைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நீண்ட காலமாக நிறுவனம் எதிர்கொண்டிருந்த நிதி நெருக்கடிகளால், ஊழியர்களுக்கான பணிக்கொடைகளை உரிய திகதியில் செலுத்த முடியவில்லை. ஆதலால், செலுத்த வேண்டிய நிலுவைகள் மீது மிகைக் கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலுவைத் தொகைகளைச் செலுத்த, திறைசேரியிலிருந்து நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், குறித்த நிதி கிடைத்த பிறகு அதனுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கிறோம்.

(இ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் கடந்த பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. அந்த வகையில் 2021.12.31 ஆந் திகதிக்கு திரண்ட நட்டம் ரூபா. 2.127 மில்லியன் ஆகும். எனவே, இந்நிதி நெருக்கடி காரணமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய வரி தொடர்பில் நிறுவனம் கவனம் செலுத்தவில்லை. இருப்பினும், மற்ற வரி அறிக்கைகள் (முத்திரை வரி, உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இது குறித்து

பணிப்பாளர் சபைக்கு தெரிவித்து அது தொடர்பாக அவர்களின் ஆலோசனைகளின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினால் பேணி வருகின்ற அனைத்து நடைமுறைக கணக்குகளுடன் தொடர்பான வங்கி இணக்கக்கூற்றினைத் தயாரிக்கும் போது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரித்த திகதியை 2022 ஜனவரி முதல் குறிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உ) 2023 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தன் வணிகத் திட்டத்தை தயாரிக்கும் பணி தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், அதனை 2023 ஏப்ரல் மாதமாகும் போது பெருந்தோட்டத் தொழிற்சாலைகள் அமைச்சுக்கு முன்வைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்திற்கு ஒரு வணிகத் திட்டம் எதுவும் இல்லை என்றாலும், பெருந்தோட்டத் துறைக்கு 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிரல் அமைச்சின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. நிரல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்குரிய பெருதோட்டத் துறைக்கான செயல் திட்டத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 05)

(ஊ) பொது நிறுவனங்களுக்கான நல்ல நிர்வாகம் தொடர்பான வழிகாட்டலின் 4.2.3 மற்றும் 4.2.6 என்ற உறுப்புரைகளின்படி செயலாற்றுகை / முன்னேற்ற அறிக்கைகளைத் தயார்செய்து காலாண்டு, அரை ஆண்டு மற்றும் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். என்றாலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

2021 ஆம் ஆண்டில், கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பிற காரணங்களால் அலுவலக நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறாமையினால் செயலாற்றுகை/ முன்னேற்ற அறிக்கைகளை காலாண்டுகளின் அடிப்படையில் தயாரிக்க முடியவில்லை. இருப்பினும், 2022 ஆம் ஆண்டிற்கான பெருந்தோட்டத் துறையின் செயல் திட்டத்தின்படி காலாண்டு அடிப்படையில் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. குறித்த வரவு செலவு திட்ட ஆவணத்தின் பிரதி இங்கு இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 06)

(எ) கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிட்டுள்ள பாவனையிலிருந்து நீக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள வாகனங்கள் மற்றும் தற்போது பாவனையிலுள்ள வாகனங்கள் பற்றிய விபரங்கள் 2022.08.19 ஆம் திகதி நடாத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பான பௌதீக பரிசோதனைக்கு ஏற்பே கீழே காட்டப்பட்டுள்ளன.

- **ஓட்டக்கூடிய நிலையிலுள்ள வாகனங்கள்**

வாகனம் தற்போது இருக்கும் இடம்	**வாகனத்தின் இலக்கம்**	**வாகனத்தின் வகை**
தலைமைக் காரியாலயம்	43-1066	வேன்
தலைமைக் காரியாலயம்	204-4233	முச்சக்கர வண்டி
தலைமைக் காரியாலயம்	37-9005	உழவு இயந்திரம்

- **திருத்தப்படுகின்ற வாகனங்கள்**

வாகனம் தற்போது இருக்கும் இடம்	வாகனத்தின்	வாகனத்தின்

	இலக்கம்	வகை
கொட்ட கங்கைத் தோட்டம்	GA 0343	லொரி
கெலேபொக்க தோட்டம்	GJ 3629	லொரி

- **திருத்துவதற்குத் திட்டமிட்டுள்ள வாகனங்கள்**

வாகனம் தற்போது இருக்கும் இடம்	**வாகனத்தின் இலக்கம்**	**வாகனத்தின் வகை**
கெலேபொக்க தோட்டம்	43-1067	வேன்
கல்பிஹில்ல தோட்டம்	32-4773	ஜீப்
கல்பிஹில்ல தோட்டம்	32-5871	ஜீப்
கல்பிஹில்ல தோட்டம்	32-3753	ஜீப்
கல்பிஹில்ல தோட்டம்	32-3646	ஜீப்
கல்பிஹில்ல தோட்டம் xxx	32-4734	ஜீப்

பாவனைக்குதவாத பொருட்களாக அகற்றுவதற்கு மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் பரிசீலனை செய்து வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் பட்டியல் கீழே காட்டப்பட்டுள்ளது. இந்த வாகனப் பாகங்களின் செஸிஸ் இலக்கங்களை நீக்கிவிட்டு பதிவுச் சான்றிதழ்களை இரத்து செய்த பிறகு பாவனைக்குதவாத பொருட்களாக விற்பனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

வாகனம் தற்போது இருக்கும் இடம்	**வாகனத்தின் இலக்கம்**	**வாகனத்தின் வகை**
கெலேபொக்க தோட்டம்	46-2086	உழவு இயந்திரம்
கெலேபொக்க தோட்டம்	46-1229	உழவு இயந்திரம்
கெலேபொக்க தோட்டம்	43-1192	லொரி
கெலேபொக்க தோட்டம்	41-5682	லொரி
கெலேபொக்க தோட்டம் xxx	43-1570	லொரி
கெலேபொக்க தோட்டம்	43-1435	லொரி
கல்பிஹில்ல தோட்டம்	125-4601	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	127-3478	மோட்டார் சைக்கிள்
அலகொல்ல தோட்டம்	43-2641	லொரி
அலகொல்ல தோட்டம்	43-2623	உழவு இயந்திரம்
கல்பிஹில்ல தோட்டம்	16-1107	கார்
கல்பிஹில்ல தோட்டம் xxx	145-6413	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	GI 9961	மோட்டார் சைக்கிள்
கல்பிஹில்ல தோட்டம்	15-0386	கார்
கெலேபொக்க தோட்டம் xxx	127-3372	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	46-0225	உழவு இயந்திரம்
கல்பிஹில்ல தோட்டம்	127-3399	மோட்டார் சைக்கிள்
கல்பிஹில்ல தோட்டம்	125-4632	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	127-3415	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	43-1814	லொரி
கல்பிஹில்ல தோட்டம்	26-3316	லொரி

கல்பிஹில்ல தோட்டம்	127-3759	மோட்டார் சைக்கிள்

விற்பனை செய்த பிறகு திருத்தி பாவனைக்கு எடுக்கத்தக்க வாகனங்கள் தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பரிசீலனை செய்து வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைவாக (ஓட்டும் நிலையில் இல்லாதவை) 2023.01.10 ஆம் திகதி திகமின, டேய்லிநியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வாகன விற்பனைக்கான விலைமனு கோரப்பட்டுள்ளது. விலைமனு கோரிய இறுதித்திகதி 2023.03.10 ஆகும். அந்த வாகனங்களின் பட்டியல் கீழ்வருமாறு.

வாகனம் தற்போது இருக்கும் இடம்	வாகனத்தின் இலக்கம்	வாகனத்தின் வகை
கெலேபொக்க தோட்டம்	41-5412	மோட்டர் ட்ரக்
கெலேபொக்க தோட்டம்	41-4850	மோட்டர் ட்ரக்
கல்பிஹில்ல தோட்டம்	40-5185	மோட்டர் ட்ரக்
கல்பிஹில்ல தோட்டம்	16-1075	கார் வண்டி
கெலேபொக்க தோட்டம்	GI 9543	மோட்டார் சைக்கிள்
அலகொல்லைத் தோட்டம்	GI 9544	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	GI 9591	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	GI 9561	மோட்டார் சைக்கிள்
கெலேபொக்க தோட்டம்	GI 9670	மோட்டார் சைக்கிள்
கல்பிஹில்ல தோட்டம்	16-1103	கார் வண்டி
கல்பிஹில்ல தோட்டம்	125-4662	மோட்டார் சைக்கிள்
கல்பிஹில்ல தோட்டம்	127-3753	மோட்டார் சைக்கிள்
தலைமைக் காரியாலயம்	16-1108	கார் வண்டி
தலைமைக் காரியாலயம்	16-0967	கார் வண்டி

XXX உரிய கணக்காய்வு உசாவலில் குறிப்பிடப்படாத, என்றாலும் வாகனம் தொடர்பான பௌதீகப் பரிசோதனையின் போது இனங்கண்ட வாகனங்கள் மேற்குறிப்பிட்ட அட்டவணையில் இவ்வாறு சுட்டிக்காட்டுள்ளன.
அந்த வகையில், கூட்டுத்தாபத்திற்குரிய வாகனங்களின் எண்ணிக்கை பற்றி சாராம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.

உரிய கணக்காய்வு உசாவலில் குறிப்பிட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை	98
குறித்த கணக்காய்வு உசாவலில் குறிப்பிடப்படாத, என்றாலும் வாகனங்களின் பௌதீக பரிசீலனையின் போது இனங்கண்ட வாகனங்களின் எண்ணிக்கை	06
மொத்தம்	104
கழி	
மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை	47
எஞ்சியுள்ள வாகனங்களின் எண்ணிக்கை	57

வாகனம் தொடர்பிலான பௌதீகப் பரிசீலனையின் போது 57 வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் இல்லை என்று அடையாளங் காணப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டபோது

இந்த வாகனங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது. எனவே, இது எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்று அறியத்தருகிறோம். குறித்த வாகனப் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு எண். 07)

ஏ) கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிட்டுள்ள KY 4353 எனும் இலக்க கார் வண்டி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனமாகும். மேலும், PB 8673 இலக்க கெப் வண்டி 2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படவில்லை. பெருந்தோட்ட அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த வாகனம் திருத்தப்பட்ட பிறகு 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2006 ஜூலை 14 ஆம் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள இணைப்பு 03 மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி மேலதிக எரிபொருளுக்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை என்று கணக்காய்வுப் பந்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2015 ஆம் ஆண்டு முதல் PED/1/2015 மற்றும் 2015.05.25 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்கவே அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் உத்தியோகத்தர்களின் எரிபொருள் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகள் நிர்வகிக்கப்படுகின்றன. அச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு அமைவாக மேலதிக எரிபொருக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றிருந்தாலும் அது தொடர்பாக பயன்படுத்த வேண்டிய மாதிரிப் படிவம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

2021.03.21 ஆம் திகதிய NPI/ADMIN/09 ஆம் இலக்க பொது அறிவுறுத்தல்கள் v-3 இலக்க பெருந்தோட்ட அமைச்சின் கடிதத்திற்கு அமைவாக தேவையான தகவல்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் மூலம் மேலதிக எரிபொருளுக்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. பொது முயற்சிகள் திணைக்களத்தின் PED/01/2020 மற்றும் PED/01/2015 இலக்க சுற்றறிக்கைகள் மூலம் மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான விதிமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிறகு அரச பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள PED/04/13(1) ஆம் இலக்க மற்றும் 2021.03.18 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக பெருந்தோட்ட அமைச்சின் செயலாளரினால் குறித்த கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. நிரல் அமைச்சினால் வெளியிட்டுள்ள கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 08).

(ஐ) போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்ட உள்ளகக் கணக்காய்வாளராக பணிபுரிந்த உத்தியோகத்தர் 2021.05.31 ஆம் திகதி சேவையிலிருந்து விலகிச்சென்றுள்ளார். அதன் பிறகு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே, முகாமைத்துவம் (காணிகள்) எனும் பதவியில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் 2022.01.01 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

2.2.3 இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் அதிகாரம் மற்றும் கடமைகளின் அடிப்படையில் செயற்பட்டிருப்பதாக அறிவிக்கிறோம்.

2.2.4 கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் அதற்குச் சொந்தமான வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்தியதாக அறிவிக்கிறோம்.

(அ) 2021 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்தியை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தேயிலை உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் ஆவணங்களின்படி, மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தில் கொட்டகங்கை, ஹெயார்பார்க், மிட்லாண்ட், ஓபல்கலை மற்றும் வுட்ஸைட் தோட்டங்களின்

விளைச்சல் 2020 ஐ விட 2021 ஆம் ஆண்டில் 4% முதல் 11% வரை குறைந்துள்ளதாக நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

கொட்டகங்கை மற்றும் ஹெயாபார்க் தோட்டங்களின் தேயிலைப் பயிர்ச்செய்கையில் அதிக சதவீதம் பழைய விதைப் பயிர்ச்செய்கையாகும். மேலும் மதிப்பீடு செய்யப்படுகின்ற வருடத்தில் பழைய விதைத் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான உரம் வழங்கப்படும் போது 2020 ஆம் ஆண்டை விட குறைந்த சதவீதமே வழங்கப்பட்டுள்ளமையினாலும், வழங்கப்பட்ட உரத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விளைச்சலைப் பெறுவதற்கு தளிர் தேயிலையை விட அதிக காலம் செல்வதாலும் இந்த இரண்டு தோட்டங்களின் அறுவடை 2020 ஆண்டை விட குறைவாக உள்ளதுடன், மிட்லேண்ட் மற்றும் ஓபல்கலைத் தோட்டங்களில் இந்த ஆண்டில் மழைவீழ்ச்சி குறைவாக இருந்துள்ளமையினால் அவ்விரு தோட்டங்களின் விளைச்சல் பாதிக்கப்படுள்ளதாக அறிவிக்கிறோம்.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் 10,345,522 கிலோ தேயிலை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அந்த நேரத்தில் நாட்டில் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலைகள் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் உண்மையான உற்பத்தி 8,385,002 கிலோ தேயிலை ஆகும். எனவே, இது எதிர்பார்த்த உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 19% குறைவாகும்.

(இ) 2021 ஆம் ஆண்டில், வெளிப்புற தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1,059,607 கிலோவாக இருந்தாலும், உண்மையான உற்பத்தி 793,501 கிலோ கிராமாகவே இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலின் 75% ஆகும். இருப்பினும், வெளிப்புறத் தோட்டக்காரர்களுக்கு மிகக் குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட தேயிலை நிலங்களே வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், 2021 ஆம் ஆண்டில் இரசாயன உரங்கள் வாங்குவதில் சிக்கலான சூழ்நிலை காரணமாக, வெளிப்புறத் தோட்டக்காரர்களுக்கு குறைந்தளவு உரங்கள் வழங்கப்பட்டதால் தேயிலை உற்பத்தி எதிர்பார்த்தபடி விருத்தியாகவில்லை.

இ) இந்த முறை பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும், அதன்படி 2024 ஆம் ஆண்டில் இந்த முறையில் தேவையான திருத்தம் செய்யப்படும் என்றும் தயவுடன் அறியத்தருகிறோம்.

(ஈ) ஒரு கிலோ பச்சைத் தேயிலைக் கொழுந்தினை உற்பத்தி செய்வதற்கான சராசரி செலவு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் வருடத்தில் ரூ.121.08 ஆக இருப்பதுடன், விஹாரகலா தோட்டத்தில் உற்பத்திச் செலவு ரூ.360 ஆக உள்ளது.

இத்தோட்டங்கள் பல ஆண்டுகளாக வெளித்தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததுடன், அத்தோட்டங்களில் 100% பழைய விதைத் தேயிலைப் பயிர்ச்செய்கையை உள்ளது. அதன்படி, ஒரு நாளுக்குரிய தேயிலை விளைச்சல் மிகக் குறைவாக இருந்ததால், அதன் உற்பத்திச் செலவு நிறுவனத்தின் சராசரி உற்பத்தி செலவை விட அதிகமாக இருந்தது.

(உ) புதிய தொழில்நுட்பத்தின் கீழ் மதிப்புச் சங்கிலியை அதிகரிக்கும் நோக்கத்துடன் நவீனமயமாக்கப்பட்ட (Orthodox) கோமரைத் தொழிற்சாலை 2023 ஆம் ஆண்டில் அதன் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பல தோட்டங்களின் பச்சைத் தேயிலையை அத்தொழிற்சாலைக்கு வழங்கக்கூடியதாக இருக்கும். அதே போன்று, கெலேபொக்கை தொழிற்சாலையையும் நவீன இயந்திரங்களுடன் நவீனமயப்படுத்தப்படுகிறது. எனவே, எதிர்காலத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தேயிலை கொழுந்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் தேயிலைத் தொழிற்சாலைகளை இயக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புரைகள்

i. தேயிலைக் கொழுந்து விற்பனையுடன் தொடர்பாக விலைமனு கோருவதற்காக பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், பத்திரிகை விளம்பரங்களின் பிரதிகள் PAL/C/2021/AQ/03 ஆம் இலக்க 2023 ஜனவரி 12 ஆம் திகதிய கணக்காய்வு உசாவலுக்கான விடைகளுடன் அனுப்பப்பட்டுள்ளன. குறித்த விளம்பரங்களின் பிரதிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் சேர்க்கப்படவில்லை, இப்போது அந்தக் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ii. தேயிலை கொழுந்துகளை விற்பனை செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கொள்வனவாளர்களிடமிருந்தும் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஹட்டன் ப்ளான்டேஷன் கம்பனி 28.02.2020 ஆம் திகதி மீளளிக்கக்கூடிய விலைமனுகோரல் வைப்பாக ரூ. 1,100,000.00 செலுத்தப்பட்டுள்ளதுடன், அப்பணம் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய விலைமனுக்களை முன்வைக்கும் போது குறித்த பற்றுச் சீட்டுக்களின் இலக்கம் விலைமனு கோரல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. என்றாலும், இனிமேல் அந்தப் பற்றுச் சீட்டுக்களின் பிரதிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கிறோம்.

iii. தேயிலை கொழுந்துகளை வாங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தரப்பினருடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களுக்கேற்ப, அந்நிறுவனங்கள் மாதாந்தம் கொள்வனவு செய்கின்ற கொழுந்துகளின் தொகையின் இரு மடங்கிற்குச் சமனான பணத்திற்கு வங்கி அல்லது பண முறிகள் பெற்றுள்ளன.

iv. ஒவ்வொரு மாதமும் முதலாவது தினத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் கட்டாயமாக விற்பனை செய்ய வேண்டுமென்பதால், நாட்டில் நிலவிய மோசமான சுகாதார நிலைமைகள் மற்றும் பிற தவிர்க்க முடியாத காரணங்களால் குறித்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் பூரணப்படுத்தப்படவில்லை என்பதுடன், நீண்ட காலமாக கொழுந்துகளை விலைக்கு வாங்கும் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் கொழுந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எனினும், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பின்னர் பூர்த்தி செய்யப்படும் என்று அறியத்தருகிறோம்.

v. 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் சூழ்நிலையை அடுத்து குறைந்த அளவிலான ஊழியர்களின் வருகை காரணமாக இந்நிலை உருவாகியுள்ளது. இருப்பினும், அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களை சமர்ப்பித்த விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டன என்பதை அறியத்தருகிறோம்.

vi. குருகம தேயிலைத் தொழிற்சாலை பச்சைத் தேயிலைக் கொழுந்தின் கொள்வனவுக்கு கொள்வனவாளர்களால் முன்வைக்கப்பட்டிருந்த விலைகளை விட கூடுதலானதொரு விலையை வழங்குவதற்கு இணங்கியதால் கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடிக்கு மத்தியில் அதிக வருமானத்தை ஈட்டும் நோக்கத்துடன், இதர விண்ணப்பதாரர்களின் ஒப்புதலின் அடிப்படையில் அந்தத் தொழிற்சாலைக்கு குறித்த விலைமனு வழங்கப்பட்டுள்ளது. இந்த இலைகளை வாங்குவதற்கு குருகம தேயிலைத் தொழிற்சாலையும் விலைமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2021.10.21 ஆம் திகதி விலைமனு திறக்கப்பட்டமை தொடர்பான குழு அறிக்கையின் ஒரு பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 09)

ஆ) 2021.12.31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய தேயிலைக் கொழுந்து வருமானத்திலிருந்து 2 முதல் 4 பழைய நிலுவைகளை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒரு வருடத்திற்குக் குறைவான பிற நிலுவைகளுள் பின்வரும் நிறுவனங்களிலிருந்து உறப்பட வேண்டிய நிலுவைகள் ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளன.

கடன்பட்டோர் பெயர்	2021.12.31 ஆம் திகதிக்கு மீதி	தீர்க்கப்பட்ட திகதி	தீர்க்கப்பட்ட தொகை	பற்றுச்சீட்டு இல.
கெரோலினா தோட்டம்	4,360,872.28	2022.01.09	5,000,000.00	RH/22/09
ஸ்டெட்டன்	1,339,769.17	2022.01.24	1,500,000.00	RH/22/50
குருகம தேயிலைத் தொழிற்சாலை	2,105,193.00	2022.01.07	2,105,911.00	RH/22/14
ராக்ஷாவ தேயிலைத் தொழிற்சாலை	1,493,118.00	2022.01.10	1,493,118.00	RH/22/20

இட்டகலை தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து அறிவிட வேண்டிய ரூபாய் 242,503.00 தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகின்ற ஒரு கணக்கீட்டுக் குறைபாட்டிலிருந்து எழும் ஒரு நிலுவை ஆகும். இந்த வழுக்களை சரிசெய்வதற்கான கணக்குச் சீராக்கல்கள் 2022 ஆம் ஆண்டிற்கான நிதியறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

கடன்களை அறவிட்டுக்கொள்ள தற்போது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

நிறுவனம்	தொகை. ரூ.ச
எம்.ஈ.கீ.சீ தனியார் கம்பனி.	3,541,873.00
நானுஓய தேயிலைத் தொழிற்சாலை	5,136,192.00
புஸ்ஸதென்ன தேயிலைத் தொழிற்சாலை	655,279.00

(இ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதி 22 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

I. முகாமைத்துவம் (விற்பனை)

இந்தப் பதவி 2020.07.01 ஆம் திகதி முதல் வெற்றிடமாக இருந்ததுடன், அந்தப் பிரிவின் கடமைகள் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்டது. என்றாலும், இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக நிரல் அமைச்சினூடாக பொதுத் திறைசேரியிடமிருந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

II. உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளராக பணியாற்றிய உத்தியோகத்தர் 2021.05.31 ஆம் திகதி கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து விலகிக்சென்றதுடன், 2022.01.03 ஆம் திகதி அப்பதவிக்கு மீண்டும் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

III. சிரேஷ்ட தோட்ட அதிகாரி

இந்தப் பதவியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள தோட்ட அதிகாரி பதவியை அங்கீகரித்துத் தருமாறு நிரல் அமைச்சினூடாக பொதுத் திறைசேரிக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

IV. கணக்காளர்

கணக்காளராக சேவையாற்றிய உத்தியோகத்தர் 2021.06.19 ஆம் திகதி சேவையிலிருந்து விலகிச்சென்றார். மேலும், 2022.11.15 ஆம் திகதி மீண்டும் அப்பதவியில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார்.

V. பொது முகாமையாளரின் பிரத்தியேக உதவியாளர் (PA to General Manager)

இப்பதவிக்கு 2018.11.12 ஆம் திகதி ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் 2020.05.27 ஆம் திகதி பதவி துறந்ததுடன், அந்தப் பதவிக்கு 2022.04.21 ஆம் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தரும் 2022.08.05 ஆம் திகதி பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். எனவே, இந்த வெற்றிடத்தினை நிரப்புவதற்காக அனுமதிகோரி நிரல் அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

VI. முகாமைத்துவ உதவியாளர் (கணக்காய்வு)

2019 ஆம் ஆண்டில், புதிய கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியை அங்கீகரிக்க பொதுத் திறைசேரிக்கு ஒரு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த பதவியை அங்கீகரிக்க முடியாது என்று அறிவித்து, அதற்குப் பதிலாக கணக்காய்வுப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளர் ஆளணிக்கு தேவைப்பாடு இல்லாதிருந்தாலும், தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் தேவைப்படுவதால் அதற்குரிய அனுமதி கோரி நிரல் அமைச்சிற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

VII. முகாமைத்துவ உதவியாளர்

அப்போது ஆறு முகாமைத்துவ உதவியாளர்களுக்கு வெற்றிடம் காணப்பட்டதுடன், 2022.01.19 ஆம் திகதியே ஆட்சேர்ப்பு இடம்பெற்றது.

VIII. ஓட்டுநர்

ஓட்டுநர்கள் 4 பேருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அனுமதி கோரி நிரல் அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

IX. தொழிலாளர்கள்

தொழிலாளர்கள் 4 பேருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அனுமதி கோரி நிரல் அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

X. உதவி முகாமையார் (பிராந்தியக் காரியாலயம்)

பிராந்திய காரியாலயத்தில் உதவிக் கணக்காளர் ஒருவர் சேவையாற்றுவதன் காரணமாக உதவி முகாமையாளர் கடமையை அந்த உத்தியோகத்தர் மூலம் நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக இருப்பதால் இப்பதவிக்கு வேறொரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. என்றாலும், தற்போது குறித்த வெற்றிடத்தினை நிரப்புவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள நிரல் அமைச்சிற்குக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனம் நீண்ட காலமாக நிதி நெருக்கடிக்கு முகங்கொடுப்பதால், வரையறுக்கப்பட்ட ஊழியர்களுடன் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. இருப்பினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக புதிதாக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஒப்புதல் பெறுவதில் சிக்கல்கள் இருந்ததாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் சேவைத் தேவைகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டுள்ளதுடன், இப்பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கான அங்கீகாரத்தை தனிநபர் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக நிரல் அமைச்சினூடாக சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு 2022.10.10 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(உ) 5. காணிகள் பிரிவின் சேவைத் தேவை காரணமாக ஒப்பந்த அடிப்படையில் சட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன், குறித்த உத்தியோகத்தர் பதிவி விலகிய பிறகு 2022.01.03 ஆம் திகதி இப்பதவிக்கு நிரந்தர அடிப்படையில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஊ) கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் நிரல் அமைச்சினூடாக 2022.01.26 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், பிறகு இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் பல தடவைகள் கலந்துரையாடி தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டன. எனவே. கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ) SLSPC/PL/TB/T-166/2021 இலக்க விலைமனு கோரலுடன் தொடர்புடைய உடன்படிக்கை தற்போது கோவையில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஏ) ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இந்நிலைமை ஏற்படாது என வகைகூறுகிறேன் என்று அறியத்தருகிறோம்.

(ஐ) விலைமனு கோரலை முன்வைப்பதற்காக பெற்றுக்கொள்கின்ற மீளளிக்கும் வைப்புத் தொகையை குறித்த விலைமனுதாரரினால் முன்வைக்கப்படுகின்ற வேண்டுகோள் கடிதத்திற்கேற்ப மீண்டும் செலுத்தப்படுவதுடன், இழப்பீட்டினை ஈடுசெய்யும் வைப்புத் தொகை அது தொடர்பாக தோட்ட அதிகாரியினால் வழங்கப்படுகின்ற அறிக்கைக்கு ஏற்ப குறித்த தொகையை கழித்து மீண்டும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இது தொடர்பான விபரங்கள் பெறுகை தொடர்பான கோப்புகளில் உள்ளடக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலங்களில் தவிர்ந்துகொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

ஒ) மர விற்பனையுடன் தொடர்புடைய கோப்புகளில் மரங்களை அகற்றுவது பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலங்களில் தவிர்ந்துகொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.